19 வது வருடத்தில்
# விளம்பரம் VLAMBARAM™
416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm
மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338
416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton
சந்திப்புக்கு அருகாமையில்

நதி 19 | பாலம் 11 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JUNE 01, 2009

# புலம்பெயர்தோரின் கடமை!

## தமிழர் இலட்சியத்தை நிறைவேற்ற மாவீரர் தாள் பணிந்து எமது போராட்டத்தை புலம்பெயர்ந்த நாடுகளில் தொடர்வோம்!

*'கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின் எற்றா விழுமந் தரும்.'*

செய்து முடிக்கும் வரையில் ஒரு செயலைப்பற்றி வெளிப்படுத்தாமலிருப்பதே செயலாற்றும் உறுதி எனப்படும். இடையில் வெளியே தெரிந்து விட்டால் அச்செயலை நிறைவேற்ற முடியாத அளவுக்கு இடையூறு ஏற்படக் கூடும் என்பது வள்ளுவர் வாக்கு.

1948 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மொழிக்கு தகுந்த சமஉரிமை வேண்டி இலங்கையில் நடைபெற்ற போராட்டங்களில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட பொதுமக்களும் கிட்டத்தட்ட 25 ஆயிரம் போராளிகளும் தமது உயிரை இழந்துள்ளார்கள். தமிழர்களின் இலட்சியம் இன்னும் நிறைவேறா விட்டாலும் அது ஒரு முக்கியமான கட்டத்தை தற்போது அடைந்துள்ளது.

முன்னர் தந்தை செல்வநாயகம் சத்தியாக்கிரகத்தில் சிங்களக் காடையர்களிடம் அடிவாங்கும் போதோ அல்லது தமிழர்கள் இனக்கலவரத்தில் சிங்களக்காடையரால் உயிருடன் எரிக்கப்படும் போதோ அச்செய்திகள் இவ் உலகத்தில் எந்த நாட்டிலுமோ எந்தப்பத்திரிகைகளிலுமோ முக்கிய இடத்தை பிடிக்கவில்லை. ஆனால் இப்போது சிங்கள அரசால் மே மாதத்தின் முதல் 19 நாட்களில் 13 ஆயிரம் பொதுமக்கள் கொன்று குவிக்கப்படும் போது அதைப்பல நாடுகள் செய்திகளாகவும் செய்மதியில் இருந்து படங்களாகவும் எடுத்ததுடன் மட்டும் அல்லாமல் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சபையில் விவாதிக்கவும் செய்தன.



இவ்வாறான ஒரு கட்டத்திற்கு இலங்கை பிரச்சினையை உலக அரங்கில் பிரபல்யமாக கொண்டு வந்த பெருமை தமது இன்னுயிரை அளித்த அந்த 25 ஆயிரம் மாவீரர்களுக்குமே உரித்தானது.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

## ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற வேட்பாளராக ஜனனி



ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக ஜனனி ஜனநாயகம் என்ற தமிழ்ப்பெண் போட்டியிடுகிறார். ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத் தேர்தல் ஜூன் 04 ஆம் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் இலண்டன் பெரும்பாகப் பிரதேசத்தில் இனஅழிப்புக்கு எதிரான தமிழர் அமைப்பின் சார்பில் ஜனனி ஜனநாயகம் போட்டியிடுகிறார். 1979 ஆம் ஆண்டிலிருந்து இத்தேர்தல் ஐந்து வருடத்திற்கு ஒருமுறை இடம் பெறுகிறது. இத்தேர்தலில் விகிதாசார முறைப்படி ஐக்கியராச்சியத்திலிருந்து 72 உறுப்பினர்கள் தெரிவுசெய்கின்றனர்.

இந்தத்தேர்தலில் போட்டியிடுவது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, 'பிரித்தானியாவிலும் ஐரோப்பாவிலும் 2001ஆம் ஆண்டிலிருந்து பொதுமக்களுக்கான சுதந்திரம் படிப்படியாக பறிக்கப்பட்டு வருவதையும் காவல்துறைக்கான அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டு வருவதையும் அவதானித்து வருகிறேன். இது இந்த நாடுகளில் வாழும் சிறுபான்மை சமூகங்களைக் கவலைக்குள்ளாக்கியுள்ளது. இலங்கையில் நடைபெறும் தமிழினப்படுகொலை விடயத்தில் பிரித்தானிய, ஐரோப்பிய அதிகார மையங்கள் பேதத்தினைக் காட்டுவதும் அது தொடர்பில் எதுவித நடவடிக்கையினையும் எடுக்காதிருப்பதும் எனக்கு மிகுந்த கவலையைத் தருகிறது.'

இவர் இலங்கையில் பிறந்து பிரித்தானியாவிலும் பிரான்சிலும் கல்வி பயின்றவர். இவரது பெற்றோர் நைஜீரியாவிலும் சாம்பியாவிலும் ஆசிரியர்களாக பணிபுரிந்தனர். ஜனனி இளமைக்காலத்தில் பெற்றோருடன் ஆபிரிக்காவில் இருக்கும்போது பிரித்தானியாவின் GCE A/L பரீட்சையில் சித்தியடைந்து மஞ்செஸ்ரர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார். அங்கு Computing and Information System இல் சிறப்புசித்திபெற்று பட்டதாரியானார். இவர் இலண்டன் பல்கலைக் கழகத்தின் இம்பீரியல் கொலிஜியில் பிரயோக கணிதத்தில் முதுமானிப்பட்டமும் பெற்றார். பிரான்சின் INSEAD வர்த்தகக்கல்லூரியில் MBA பட்டமும் பெற்றவர். இவர் தற்போது இத்தாலியின் 2ஆவது பெரிய வங்கிகளின் சம்மேளனத்தில் செயற்திட்ட முகாமையாளராக (Project Manager) ஆக பணியாற்றுகிறார்.

**துரித பணமாற்றுச் சேவை**
• 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
416.267.8221

அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM™ Veedu Mortgages Inc.

RBC Royal Bank
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee
• No Discharge Fee
• 1st Time Home Buyers • Pre-Approvals
• Debt Consolidation
• Home Equity Line of Credit
• New Immigrant & Self-Employed Programs
• Over 20 years of experience with RBC
• Fast and Efficient Service
Always with a Smile!!!
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

SATHYA SAIRAM DRIVING SCHOOL
• உங்களுக்கு பாஷை ஒரு பிரச்சினையா?
• பரீட்சை கேள்விகள் விளங்காததனால் வாகன எழுத்து பரீட்சையில் அல்லது வீதிப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லையா? கவலை வேண்டாம்.
• உங்கள் வாகனம் சம்பந்தப்பட்ட எந்த பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டுமா?
அழையுங்கள் - 416-831-5217

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

ONTARIO FLORISTS
திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழா, கோவில் மாலை, Funeral services ஆகியவற்றிக்கு வேண்டிய அனைத்து பூத்தேவைகளும் பூர்த்தி செய்து தரப்படும்.
கோவில்களுக்கு ஒரு வருடம் மாலை பெற்றால் 3 மாதம் இலவசம்.
அழைக்கவும்: 647.351.0799
24 HRS. SERVICE
2625 Eglinton Ave. E, #6

REALTY EXECUTIVES
Sri Jayasiri
Broker of Record/President
Direct: 416-939-4343
Office: 905-209-7500
Fax: 905-209-7501
Realty Executives GTA Ltd. Brokerage
Executive Mortgage Inc.
HSBC Tower, Liberty Square
3601 Highway 7 East, Suite 1005
Markham ON L3R 0M3
Each office is independently owned and operated.

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# உங்கள் நிதியமும் பணச் சந்தையும்

கிரிடிட் கார்டுகளை (Credit Card) மருந்தாகப் பயன்படுத்தினால் வாழ்வுக்கு அது விருந்தாக அமையும். அப்படி இல்லாமல் மனம் போன போக்கில் உபயோகப்படுத்தினால் தற்கொலைக்குச் சமம் ஆக அமையும். பலபேரின் நிலைமை பின்னர் குறிப்பிட்டதைப் போலத்தான் உள்ளது. கிரிடிட் கார்டு உபயோகிப்பவர்களைப் பாதுகாக்க என அமெரிக்க அரசு சில புதிய வழிமுறைகளை அறிவித்துள்ளது. அதைத் தொடர்ந்து கனடிய அரசும் சில புதிய சட்டங்களையும், வழிமுறைகளையும் கொண்டு வர எண்ணியுள்ளதாக




அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு வர இருக்கும் புதிய கிரிடிட் கார்ட் (Credit Card) வழிமுறைகள் இவைதான்.

1. கிரிடிட் கார்டுகளை (Credit Card) மாதந்தோறும் முழுவதுமாகக் கட்டும் போது குறைந்த பட்சம் 21 நாட்களாவது.....புதிய பொருள்கள் வாங்கியவற்றிற்கு வட்டி இல்லாக் கடன் கால அளவாகத் தரப்பட வேண்டும்.

2. குறைந்த பட்சத் தவணைத் தொகையைமட்டும் முழுத்தொகையையும் மாதந்தோறும் கட்டாமல் - மாதந்தோறும் கட்டி வந்தால், அந்தக் கடனை முற்றிலுமாகக் கட்டி முடிக்க எவ்வளவு காலம் ஆகும்? என்று கிரிட்கார்ட் ஸ்ரேற் மெண்ட்டில் காட்டப்பட வேண்டும்.

3. மேலும் கிரிடிட் கார்டுகளைப் பற்றிய விபரங்கள் எளிமையாகவும், புரியும்படியும் விண்ணப்ப படிவங்களிலும், ஒப்பந்தப் பத்திரங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

4. கிரிடிட் கார்ட் கலைக்கஷன் (Credit Card Collection) நிறுவனங்கள் வாடிக்கையாளர்களைத் தொலைபேசியில் அழைக்கும் நேரங்களிலும் சில நிபந்தனைகள் விதிக்கப்பட உள்ளது.

இதுபோல மேலும் சில மாறுதல்களும் வர உள்ளன. இவை எல்லாமே வாடிக்கையாளர்களுக்கு நன்மை பயக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள்.

ஆனால் அமெரிக்க அரசைப் போன்று கனடிய அரசு வட்டி வீதத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

கனடிய நிதிமந்திரி ஜிம் பிளாஹர்டி (Jim Flaherty), வாடிக்கையாளர்களுக்குத் தேர்வு செய்ய நிறைய கார்டுகள் உள்ளன. அதனால் தகுந்த கார்டை (புத்திசாலித்தனமாக) வாடிக்கையாளர் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்கிறார்.

Financial Consumer Agency of Canada என்று ஒரு கனடிய அரசுத் துறை உள்ளது. அுவர்களின் இணையதளம் உங்களுக்கு ஏற்ற கிரிடிட் கார்டுகளை தேர்வு செய்ய உதவுகின்றது. மேலும் கிரிடிட் கார்ட் மற்றும் நிதியம் சம்பந்தப்பட்ட பல உபயோகமான செய்திகளையும், அ றி வு ை ர க ை ள யு ம் வாடிக்கையாளர்களுக்குக் கூறுகின்றது. இணை தள முகவரி - www.fcac-acfc.gc.ca

ஒரு எளிய அறிவுரை - கையில் காசு இருந்தால் என்ன வாங்குவீர்களோ அதை வாங்க மட்டும் கிரிடிட்கார்டுகளை உபயோகியுங்கள்.

முடிந்த வரை மாதந்தோறும் முழுத் தொகையையும் கிரிடிட் கார்ட்டுக்குக் கட்டி விடுங்கள். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில், குறைந்த வட்டியில் உள்ள லைன் ஒப் கிரிடிட்டிலிருந்து பணத்தை எடுத்து கிரிடிட் கார்டுக்கு முழுவதும் தவறாது கட்டி வாருங்கள். உங்கள் மாத வரவு என்ன? மாதச் செலவு என்ன? தெரிந்தது போல இருக்கும். ஆனால் பல பேருக்குத் தெரிவதில்லை. இதுதான் உண்மை. கடதாசி ஒன்றில் எழுதிப் பாருங்கள். வரவுக்கு ஏற்ற செலவு வாழ்வைச் சிறப்பாக்கும்.



**பெரி. முத்துராமன்**

# புலம்பெயர்ந்தோரின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால்; உலக நாடுகளுக்கு எல்லாம் கடந்த 4 மாதங்களாக 20 ஆயிரம் பொதுமக்கள் சிங்கள அரசால் படுகொலை செய்யப்படுகிறார்கள் என்று ஐயம்திரிபுற தெரிந்திருந்தாலும் அவர்கள் ஒன்றுமே செய்யவில்லை. ஒரு ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட அரசு தனது நாட்டிலுள்ள ஆயுதம் தாங்கி போராடும் பயங்கரவாதிகளை அடக்குகிறது. அதன் விளைவால் (Collateral) பொதுமக்கள் கொல்லப்படுகிறார்கள் என்று கூறிக்கொண்டு தகவல்களை எல்லாம் தனது செய்மதி ஊடாகவும் சேகரித்து கொண்டு இந்நாடுகள் சும்மா இருந்து விட்டன.

இவ்விடயம் புலம்பெயர்ந்த மக்களுக்கு மட்டுமல்ல களத்தில் நின்று போராடிய போராளிகளுக்கும் அவர்களின் தலைமைக்கும் நன்கு தெரிந்திருந்தது. அவர்கள் உலகில் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்களை ஒன்றுபடவைக்கவும் அவர்கள் தமிழர் இலட்சியத்தை நிறைவேற்ற ஒன்றுபட்டு தொடர்ந்து போராடுவார்கள் என்ற நம்பிக்கையிலும் களத்தில் நின்று தீவிரமாக போராடி எதிரிக்கு அதிகூடிய உயிரிழப்பை ஏற்படுத்தி வீரமரணம் அடைந்தார்கள். இப்போராட்டத்தில் சில தலைவர்கள் இறுதிநேரம் வரை போராட்டத்தை நடத்தி தலைமறைவாகியும் இருக்கலாம்.

புலம்பெயர்தமிழர்கள், யார் வீரமரணம் அடைந்தார்கள்? யார் தலைமறைவாகி இருக்கிறார்கள்? என்று ஆராய்ச்சி செய்வதை விடுத்து வீரமரணம் அடைந்தவர்கள் எந்த இலட்சியத்திற்காக போராடினார்களோ அதை தொடர வேண்டும். அதுவே மறைந்த வீரர்களுக்கு செய்யும் மிகப்பெரிய நன்றிக்கடனாகும்.

மறைந்த சகல தலைவர்கனது சார்பிலோ அல்லது மறைவாக உள்ள தலைவர்களின் சார்பிலோ வெளியிடப்பட்ட செய்தியானது “இனி வன்முறை போராட்டத்திற்கு இடங்கொடுக்கப்போவது இல்லை. ஆயுதங்களின் பாவனையை மௌனிக்க வைத்துவிட்டோம்” என்ற செய்தியின் முக்கியத்துவத்தை புலம்பெயர்ந்த ஒவ்வொரு தமிழரும் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். நிச்சயமாக இது உலகத்தலைவர்களின் கவனத்தை ஈர்க்கவும் புலம்பெயர்ந்த தமிழர்களின் போராட்டம் இன்றும் வேகமாக வளர்த்து இலட்சியத்தை நிறைவேற்ற உதவும் முகமாக வெளியிட்டப்பட்ட செய்தி என்பதே எமது முடிவாகும்.

BBC ஆங்கில சேவை வெளியிட்ட செய்தியில் புலம்பெயர் தமிழர்கள் தமக்குள் “தலைவர்கள் எல்லோரும் வீரமரணம் அடைந்து விட்டார்கள்” என்றும் “தலைவர்கள் சிலர் தலைமறைவாகி விட்டார்கள்” என்றும் இரண்டுபட்டு நின்று விவாதிக்கிறார்கள் என்று கூறியுள்ளது. இதை பார்க்கும் எமது மாவீரர்களின் ஆத்மாவும் அல்லது மறைந்து வாழும் தலைவர்களின் மனமும் எவ்வளவு துன்பப்படும் அல்லது வேதனைப்படும்.

வள்ளுவர் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கூறியபடி எமது இலட்சியத்தை அடையும் வரை எந்த தலைவர்கள் வீரமரணம் அடைந்தார்கள், எந்த தலைவர்கள் தலைமறைவானவர்கள் என்று ஆராய்ச்சி செய்து செய்திகளை வெளிப்படுத்தாமல் இருப்பதே எமது இலட்சியத்தை அடையக் கூடிய செயல்களை ஆற்றுவதற்கு உறுதியாக இருக்கும். தற்போது எமக்கு உலகநாடுகளின் உதவி இன்றியமையாத தேவையாக உள்ளது. இதற்கு நாம் வன்முறை போராட்டத்தை கைவிட்டு விட்டோம் என்ற செய்தி மிகவும் தேவையான ஒன்று. அதனால் உலகநாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் அவர்கள் வழியில் எமது போராட்டத்தை தொடர்ந்து நடத்தி எமதும் மாவீரர்களினதும் இலட்சியத்தைப் பெறுவோம். இதற்காக நாம் அனைவரும் ஒன்றுபடுவோம்.

**வணக்கத்திற்குரிய தந்தை ஜெகத் கஸ்பார் அடிகளார் வைகாசி 28, 09 இல் விடுத்த செய்தி (Fr. Jegath Gasper Raj).**

உலக நாடுகளின் உதவியுடன் நடைபெற்ற பெரிய இராணுவ எடுப்பிற்கு எதிரான போரில் நாம் தோல்வியுற்றதை ஒப்புக்கொண்டு மனதை தளர விடாமல் ஒற்றுமையுடன் எமது இலட்சியத்திற்காக நாம் போராட வேண்டும். தற்போது இயக்கத்தில் பலபிரிவுகள் தோன்றியிருக்கிறது என்பது எனக்கு மிகவும் கவலை யளிக்கும் செய்தியாக இருக்கிறது. உலகிலுள்ள உளவு நிறுவனங்களுக்கு இதுவே இனிப்பான செய்தியாகும். நான் உலகிலுள்ள புலம் பெயர்ந்த தமிழ் சமுதாயத்தை பொறுப்புணர்வுடனும் ஒற்றுமையுணர்வுடனும் உட்பிரிவுகளை தவிர்த்து ஜனநாயக முறையில் போராடி மேற்குலக நாடுகளுக்கு இலங்கையின் தமிழர் பிரச்சினைக்கு ஒரு சரியான தீர்வை கொடுக்க வலியுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். தமது இன்னுயிரை தியாகம் செய்த மாவீரர்கள் நினைவுகள் எங்களை வழிநடத்தட்டும். எனது இந்த வேண்டுகோளை பொறுப்புள்ள ஒவ்வொரு தமிழனிடமும் எடுத்துச் செல்லுங்கள். ஒரு இருண்ட பள்ளத்தாக்கில் நாம் இப்போது நடந்து கொண்டிருக்கிறோம். எமது ஒற்றுமையே எம்மை பாதுகாக்கும் நாம் இதிலிருந்து வெற்றி பெறுவோம்.

**வணக்கத்திற்குரிய பாதிரியார் இமானுவேல் அவர்கள் வைகாசி 28, 09 இல் விடுத்த செய்தி (Rev. Dr. S. J. Emanuel Germany)**

‘உங்களுடன் உங்களது நீண்ட விடுதலை பயணத்தில் பங்குபற்றி வந்தவன் என்ற முறையில் எனது பலம் எல்லாவற்றையும் சேர்த்து புலம்பெயர்ந்த இளம் மற்றும் வயது வந்த தமிழ் சமுதாயத்தை நோக்கி கேட்டுக்கொள்கிறேன். எமது தலைவருக்கு இறுதி நேரத்தில் என்ன நடந்தது என்ற விவாதத்தில் தமிழர்களின் ஒற்றுமையை பிரித்து விடாமல் முன்பை விட ஒற்றுமையுடன் எமது இலட்சியத்தை நோக்கி போராடவும்’.

**விளம்பரம்**
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

**Sales Reps. Welcome**

For All your Real Estate & Investments Needs!

**Raja M. Mahendran**, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED



HomeLife HIGHER STANDARDS

**HomeLife GTA Realty Inc.** Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga -**905.712.2666**

# கணினி வகைகள்

**பணி நிலையம்** (Work station)

வரைபடங்களுக்கான பயன்பாட்டில் எண்கணிதச் செயல்பாடுகள் அதிகம் இருக்கும். அத்துடன் படங்களைக் காண்பிக்க சிறப்பான திரை சாதனங்கள் தேவை. இதற்காகவே உருவாக்கப் பெற்றது பணிநிலையம் ஆகும். இது தன்னுடைமை கணினியைவிட அதிக வேகம் கொண்டது. கணினி வடிவமைப்பு (Computer aided design - CAD) சிக்கலான கணக்குகளின் பாவனையாக்கம் (Simulation) போன்றவற்றில் பெரிதும் பயன்படுகிறது.

தன்னுடைமை (சொந்த) கணினி (Personal Computer)




**- Bala -**

*A1 Ink Rainbow Inc.*

Email: balag2005@yahoo.com


இன்று பரவலாக பயன்படும் நான்காம் தலைமுறையின் தலைசிறந்த கணினி பீஸீ (PC-Personal Computer) என்றால் மிகை ஆகாது. இதை மேசை கணினி (Table top - Computers) என்று அமைக்கப்படுகிறது. இதன் சிறப்பு அம்சம் இதன் சிறிய வடிவமும் மிகவும் நம்பகத்தன்மை கொண்ட இயக்கமும் ஆகும். ஆகையால் இதை User Friendly என்றும் அழைப்பர். இதை தனிநபர் உபயோகத்திற்காக பயன்படும் வகையில் விலை மிகவும் குறைவாக விற்கப்படுகிறது. பெரும்பாலும் சொல் செயலிக்காகவும், சிறு தகவல் தளபயன்பாட்டிற்கும் பயன்படுகிறது.

**மடி கணினி** (Lap top)

இது சிறு கைபெட்டிக்குள் அடங்கும் அளவில் இருக்கும். புத்தக அளவில் இருப்பதால் நோட்டுப் புத்தக கணினி என்றும் (Notebook) என்றும் அழைப்பர். தன்னுடைமை கணினியின் திறனுடன் எடுத்து செல்வதற்கு எளிதாக இருப்பதால், இது பயணம் செய்யும்போது உடன் எடுத்து செல்ல மிகவும் உகந்தது. அதனால் அதிக வரவேற்பை பெற்று வருகிறது.

**இன்னும் சிறிதாக**

தன்னுடைமை இலக்க வகை உதவியாளர் என்ற இந்த வகை கணினியை (PDA - Personal Digital Assistant) என்றும் அழைக்கலாம். கைக்கு மிக அடக்கமாகவும், சிறு குச்சி (Stick) மூலம் எழுதி உள்ளீடு (Input) செய்வதாகவும் அமைந்த குட்டி கணினி இதுவாகும். பேனா சார்ந்த கணினி என்றும் அழைக்கப்படுகிறது. இக்கணினியை மிக சிறியதாகவும், கனம் (Weight) குறைந்ததாகவும் செய்ய பல புதிய தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகிறது.

**கணினி துணுக்குகள்**

• கணினி ஒரு மின்னணு இயந்திரம். கூட்டல், கழித்தல், வகுத்தல், பெருக்கல் போன்ற அடிப்படை செயல்களை செய்ய வல்லது.

• அபாகஸ் முதன்முதலாக உருவாக்கப்பட்ட கணினி அல்லது கணிப்பு சாதனம் ஆகும்.

• பிளேய்ஸ் பாஸ்கல் உருவாக்கிய சுழல் சக்கரக்கணிப்பான இன்றைய கணினியின் முன்னோடி.

• சார்லஸ் பாபேஜ் இன்றைய கணினியின் தந்தை என போற்றப்படுகிறார்.

• முதல் தலைமுறை கணினி வெற்றிட குழாய்களை சுற்றுகளிலும், காந்த உருளைகளை நினைவகங்களாகவும் கொண்டது.

• இரண்டாம் தலைமுறையில் வெற்றிடக் குழாய்களுக்கு பதிலாக டிரான்சிஸ்டர்கள் பயன்படுத்தப்பட்டன.

• மூன்றாம் தலைமுறையில் ஒருங்கமை சுற்றுகள் பயன்பட்டன.

• ஆயிரக்கணக்கான கூறுகள் அடங்கிய ஒரே சில்லில் நுண்செயலி உருவானது.

• தரவுகளின் தொகுப்பிலிருந்து தேவையான முடிவுகளை எடுக்க முடியும்.

• தரவுகளின் தொகுப்பிலிருந்து தகவலைக் கணிக்க முடியும்.

• செயல்முறை என்பது ஒரு கணிப்புக்கான செயல் கூறுகளை வரிசைப்படுத்திக் கூறுவதாகும்.

• கொடுத்த சிக்கலைத் தீர்ப்பதற்கு ஒன்று அல்லது பல நிரல்கள் எழுதப்படுகின்றன.

• கணினியில் வன்பொருள் மென்பொருள் என இரு முக்கிய கூறுகள் உள்ளன.

• கணிப்புச் செயல்பாடுகள் வன்பொருளில் நிகழ்கின்றன.

• கணினி அர்த்தமுள்ள வகையில் செயல்பட மென்பொருள் உதவுகிறது. இதில் அமைப்பு மென்பொருள் பயன்பாட்டு மென்பொருள் என இருவகை உண்டு.

• கணினியின் பாகங்களை ஆள்வது அமைப்பு மென்பொருள்.

• பயனருக்கு தேவையான கணிப்புகளைச் செய்வது பயன்பாட்டு மென்பொருள்.



• ஒப்புமை வகை கணினி தொடர்ந்து மாறும் மதிப்புகளை கொண்டு செயல்படும்.

• இலக்க வகை கணினி தனித்தனியே நிற்கும் மதிப்புகளை கொண்டு செயல்படும்.

• இரண்டு வகைகளுடைய சிறப்புகளை சேர்த்து செய்தது கலப்பின வகை.

• மிக் கணினி ஒரு வினாடியில் பலபலக்கோடி செயல்பாடுகளை செய்யவல்லது.

• முதல் நிலை கணினி வினாடியில் பல கோடி செயல்பாடுகளை செய்யும் திறன் உடையது.

• விலையை குறைப்பதற்காக உருவாக்க பெற்றவை சிறு கணினி வகைகள் ஆகும்.

• நுண் செயலி (ஒரு சில் CPU) நுண் கணினிகளை உருவாக்கியது.

• நுண்கணிகளை பணிநிலையம் தன்னுடைமை கணினி, மடி கணினி மற்றும் அதற்கும் சிறியவை என பிரிக்கலாம்.

அடுத்த இதழில் நாம் விரிவாக காண இருப்பது எண்முறைகள். பல அறிமுக கணித செயல்முறைகள் இதில் நாம் காணப்போகிறோம்...


**Bestway Driving school**

Get your **G2** Licence in 3 weeks (If qualified)

**பெண்கள் / ஆண்கள் welcome**

***Very respectfull instructor to ladies.***

**உங்களுடைய தாய்மொழியிலேயே கற்றுக்கொள்ள முடியும்**

**நம்பகமான சேவையும் நாணயமான கட்டணமும்**



**சாரதிப்பத்திரம் உத்தரவாதம்**

***Get your G licence through me.***

***If you fail G test, we will pay your test-booking fee.***

(some condition may apply)

**Approved instructor by M.T.O.**

For further details call ***Vicky: 647.284.5373***

**சேவைகள்: *Brampton - Mississauga - Toronto***

***Road test available in out cities***

**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN

Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# மதங்களை கடந்து மேலெழுதல்

## நீங்கள் காணாதவற்றையும் உங்கள் அனுபவத்தில் இல்லாதவற்றையும் நம்பத்துவங்கி விட்டீர்கள். எல்லா மோதல்களுக்கும் இதுதான் காரணம்.



சத்குரு வாசுதேவ்

மனிதன் மதம் சார்ந்து இயங்கத் துவங்கிய வினாடியே எல்லா மோதல்களுக்கும் முற்றுப்புள்ளியாக அமைந்திருக்க வேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக உலகமெங்கும் எல்லா மோதல்களுக்கும் மூல காரணமாக மதங்களே மாறிக் கொண்டு வருகிறது. இது பல பேரின் உயிர்களைப் பலி வாங்கியதோடு ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் இந்த உலகத்தில் மிகுந்த வலியையும் வேதனையயும் ஏற்படுத்தியிருக்கிறது. ஏன் இப்படி நிகழ்கிற தென்றால் தங்கள் அனுபவத்தில் இல்லாததை மனிதர்கள் நம்பத் துவங்கியது தான். ஒரு சாராருக்கு ஒரு விதமான நம்பிக்கை. மறு சாராருக்கு வேறுவிதமான நம்பிக்கை என்று இருக்கிறபோது மோதல் தவிர்க்க முடியாததாகிறது. இன்றோ நாளையோ அவர்கள் மோதியே தீருவார்கள். சிறிது காலம் அவர்கள் தர்க்கங்களைத் தள்ளிப் போடலாமே தவிர ஒருநாள் அவர்கள் மோதிக் கொள்வார்கள். உங்கள் வழிதான் சரியென்று நீங்களும் தன்னுடய வழிதான் சரியென்று வேறொருவரும் நம்பிக் கொண்டிருக்கிற போது மோதலைத் தவிர்க்க முடியாது.

எல்லா மதங்களுமே உள்நோக்கிய ஒரு பயணமாகத் தொடங்கியவைதான் என்றாலும் கூட காலப்போக்கில் அவற்றின் நோக்கங்கள் சிதைக்கப்பட்டு வெற்று நம்பிக்கைகளின் தொகுப்புகளாக அவை மாறிவிட்டன. மனித வாழ்க்கையின் அருமை குறித்து அத்தனை மதங்களும் பேசியிருந்தாலும் அதே மதங்களைக் காரணம் காட்டி மனிதர்கள் ஒருவருக்கொருவர் உயிர்களை எடுக்கும் அளவிற்குப் போய்விட்டார்கள். இதற்கான அடிப்படைக் காரணத்தை யாரும் சரியாகக் கண்டுணரவில்லை. ஒரு மதத்துக்கும் மறு மதத்துக்கும் இடையில் இணக்கத்தை ஏற்படுத்த முயலுகிறார்களே தவிர அந்த இணக்கம் நீண்டகாலம் நீடிக்காமல் மீண்டும் மோதல் வெடிக்கிறது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமே தங்கள் வாழ்வில் உணராதவற்றை மனிதர்கள் நம்புவதான். நிதர்சனத்திற்கு நீங்கள் வருவீர்களேயானால் எல்லோருக்கும் அந்த உண்மை ஒன்றுதான். எந்தச் சமய பின்புலம் உங்களுக்கிருந்தாலும் உங்கள் நம்பிக்கைகள் எப்படியிருந்தாலும் எது சரி எது தவறு என்று உங்களுக்குள்ளேயே முன் முடிவுகள் இருந்தாலும் நீங்கள் பார்த்திராதவற்றையும் உணராதவற்றையும் நம்பத் துவங்கி விட்டீர்கள். இதன் காரணமாகவே எல்லா மோதல்களும் ஏற்படுகின்றன.

யோகாவின் அடிப்படை நோக்கமே மதத்தை ஒரு நம்பிக்கையாய் பாராமல் ஒரு உள்நிலை அனுபவமாக உணர்வதாகத்தான் இருந்து வந்திருக்கிறது. நீங்கள் எந்த நம்பிக்கையோடும் தொடங்காதீர்கள். உள்நோக்கிப் பாருங்கள். எது உண்மையோ அதை மேன்மேலும் அனுபவித்து அதை ஒரு விஞ்ஞானமாக அணுகுங்கள். யோகக் கலையின் அடிப்படையில் ஒரு மனிதன் தன்னுடய உச்சநிலையை அடைய இயலும் என்பதைப் பார்க்கிறோம். அதற்கு நீங்கள் தெய்வீக நிலை என்றோ கடவுள் நிலை என்றோ என்ன பெயர் வேண்டுமானாலும் கொடுத்துக் கொள்ளலாம். உடல் மூலமாகவோ, மனம் மூலமாகவோ, உணர்வுகள் மூலமாகவோ, சக்திகள் மூலமாகவோ, தன் உச்சநிலையை மனிதன் எட்டுகிறான். இந்த நான்கு உண்மைகளைத்தான் நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள். மற்றவையெல்லாம் கற்பனைதான். அல்லது உங்களுக்குத் தரப்பட்டிருக்கிற போதனைகள்தான்.

இவை நான்குதான் யோகக்கலையின் அடிப்படையான நான்கு வழிகள். உங்கள் உச்சநிலையைத் தொடுவதற்கான வளர்ச்சிக்கு உடலை நீங்கள் பயன்படுத்துகிறீர்கள் என்றால் அது கர்மயோகமாகிறது. உங்கள் மனமோ அறிவோ பயன்படுத்தப்பட்டால் அது ஞான யோகமாகிறது. உணர்வு, அன்பு, பக்தி ஆகியவை பயன்படுத்தப்பட்டால் அது பக்தியோகமாகிறது. உங்கள் சக்திநிலையைப் பயன்படுத்தி நீங்கள் வளர்கிறீர்களென்றால் அது கிரியா யோகம். இவற்றை மூளை, இருதயம், கைகள் சக்திநிலை என்று கூறலாம். இந்த நான்கின் தொகுப்புதான் ஒவ்வொரு மனிதனும். முழுக்க முழுக்க மூளையாகவோ முழுக்கமுழுக்க இதயமாகவோ முழுக்க முழுக்க கைகளாகவோ அல்லது முழுக்க முழுக்க சக்திநிலை மட்டுமாகவோ யாருமில்லை. இந்த நான்கு பரிமாணங்களின் கூட்டமைப்புதான் மனிதர்.

எனவே ஒரு மனிதன் வளர வேண்டுமானால் பக்தி, ஞானம், கிரியை, கர்மம், ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு தேவை. இந்த நான்கும் இருந்தால் தான் உங்கள் வாழ்வில் வளர்ச்சி வரும். அப்போதுதான் உங்கள் உச்சநிலையை நீங்கள் எட்ட முடியும். இல்லையெனில் எங்கே பார்த்தாலும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கிற குழுக்கள், குழுக்கள், குழுக்கள் மட்டும் தான் இருக்கும். ஆன்மீக அடிப்படையில் அங்கே எதுவும் நிகழாது. உண்மையிலேயே ஒரு மதிப்புமிக்க தன்மை ஒரு மனிதனுக்குள் நிகழாத பட்சத்தில் வெளிச்சூழ்நிலையில் எதையும் நீங்கள் உருவாக்க இயலாது. நீங்கள் என்ன செய்கிறீர்களோ அந்தத் தன்மையைத்தான் பரப்பப் போகிறீர்கள். உங்களுக்கு பிடிக்கிறதோ இல்லயோ இதுதான் உண்மை. இந்த உலகின் மேல் உண்மையிலேயே உங்களுக்கு அக்கறை இருக்குமானால் முதலில் உங்களை மாற்றிக் கொள்வதற்கு நீங்கள் தயாராக வேண்டும். நான் என்னை மாற்றிக்கொள்ள விரும்புகிறேன் என்பதுதான் யோகா. உலகத்தை மாற்ற விரும்புவதல்ல. நீங்கள் மாறுகிற போதுதான் உலகில் மாற்றம் நிகழும். மற்றவர்களை மாற்ற விரும்புகிறேன் என்று சொன்னால் அங்கே மோதல் தான் ஏற்படும். தன்னையே மேல்நிலைக்கு எடுத்துச் செல்வதுதான் ஒரு தனிமனிதனுக்கும், சமூகத்துக்கும் முழுமையான நன்மை தருவதாக இருக்கும். இதுதான் உண்மையான புரட்சி.


**Inner Engineering**

**Date:** 19 - 25 Aug. 2009

**Location**: Latvian Canadian Cultural Centre, 4 Credit Union Drive
Toronto, ON M4A 2N8 Canada

**Free Intro talk**: Wed 19 August - 9–10am & 6:30–7:30pm

*ALL ARE WELCOME*

**Session Info:** TIMINGS: Attendance on all 7 days is mandatory.
Please select Morning or Evening session for weekdays.
Weekend sessions are common.

**Weekday Morning Session:** 9am to 12pm OR
**Weekday Evening Session:** 6:30pm to 9:30pm
Saturday: 10am to 1pm Sunday: 8am to 5pm
**Tel.: 1-866-424-4742**
website: www.ishafoundation.org www.ishayoga.org



என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்



KENNEDY / SHEPPARD New Condo. 1000 sq.ft.
2 bedroom + Den. Low maintenance.

House with Mechanic shop Scarborough

Church for sale Toronto

Buy low, Sell high - 40 years Low Interest
வங்கியின் பணத்தில் முதலீடு - 5 வருடத்தில் Cash out
5 year plan 3.9% interest Power of Sale
Properties with Tenant's Pay the cost
What's your Risk?

We look after seniors over 70 years peaceful life.

Country Style Coffee shop - Oshawa Good Income

வீடும் வியாபாரமும் Business Zoning

Future long term Investment

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு
அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

51 51 51 51 அகவை 51 51 51 51 அகவை 51 51 51 51

# இரு இடங்களில்

# துரித பணமாற்றுச் சேவை

# பொன்விழா கண்ட ஸ்தாபனம்

## இதில் 18 வருடங்கள் கனடாவில்

## கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?



தமிழ் மக்கள் இதயங்களில்
பணமாற்றுச் சேவையில்
இடம் பிடித்தவர்கள்

## மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

**3228 EGLINTON AVE.EAST, SUITE #3**
**SCARBOROUGH, ON. M1J 2H6**
தொலைபேசி எண்: **416-267-8221**

**3351 MARKHAM ROAD, SUITE #109**
**(Markham & Steeles)**
**SCARBOROUGH, ON. M1X 0A6**
தொலைபேசி எண்: **416-321-8221**

51 51 51 51 அகவை 51 51 51 51 அகவை 51 51 51 51

# I.P.L. காய்ச்சல் Done!!! விளையாட்டுத் தகவல்கள் 260

கிரிக்கெட் ரசிகர்களிடையே மிகப்பிரபல்யம் பெற்ற திருவிழா நிறைவுற்றுள்ளது. யாருமே எதிர்பார்க்காதவிடத்து முதலாவதாக நின்ற டெல்லி அணியும் இரண்டாவதாக நின்ற சென்னை அணியும் தோற்றுப்போக 3ஆவது, 4ஆவது அணிகளாக தேர்வுபெற்ற டெக்கான், பெங்களூர் அணிகள் இறுதிப்போட்டியில் மோதின.

## கண்கவர் நிகழ்ச்சிகளுடன் நிறைவுற்றது ஐ.பி.எல்.

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கண்கவர் கலைநிகழ்ச்சிகளுடன் இரண்டாம் சீசன் இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்) கிரிக்கெட் போட்டி தென் ஆபிரிக்காவில் ஞாயிற்றுக்கிழமை நிறைவுற்றது. ஆடம் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணி வெற்றி பெற்றதும் வான்டரர்ஸ் ஸ்ரேடியத்தில் இருந்த மின் விளக்குகள் அணைக்கப்பட்டு கலைநிகழ்ச்சிகள் தொடங்கின. கலையம்சம் கொண்ட ஒலி, ஒளி நிகழ்ச்சிகளுடன் இரவைப் பகலாக்கிய வாண வேடிக்கைகள் ரசிகர்களை மெய்சிலிர்க்க வைத்தன. பாலிவுட் நடிகை காத்ரினா கைபின் ஆட்டம் ரசிகர்களுக்கு கூடுதல் விருந்தளித்தது.

முன்னதாக தென்ஆபிரிக்க அதிபர் ஜேக்கப் ஜுமாவும், ஐபிஎல் சேர்மன் லலித் மோடியும் அரங்கில் குழுமியிருந்தவர்களிடம் பேசினர். ஜுமா பேசுகையில், போட்டியைத் தொடங்க குறைவான கால அவகாசமே இருந்த நிலையில் தென்ஆபிரிக்கா மீது நம்பிக்கை வைத்து ஐபிஎல் தொடரை நடத்த அந் நிர்வாகத்தினர் வாய்ப்பளித்தனர். அதற்கு எனது நன்றி.

3 வாரத்தில் 8 ஸ்ரேடியங்களைத் தயார் செய்தோம். தவிர கூடுதலான ஹோட்டல் அறைகளைத் தயார்படுத்தியதுடன் விமான டிக்கெட்டுகளுக்கும் வழிவகை செய்தோம். ஷாருக்கான், பிரீத்தி ஜிந்தா, ஷில்பா ஷெட்டி ஆகியோர் தென்ஆபிரிக்கா வந்து உற்சாகப்படுத்தியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் ஜுமா.

லலித் மோடி, தென்ஆபிரிக்க அரசின் உறுதுணை இல்லாவிட்டால் இப்போட்டி வெற்றிகரமாக நடந்திருக்க முடியாது. ஆதலால் அரசுக்கும், கிரிக்கெட் வாரியத்துக்கும் இத்தருணத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த சீசன் போட்டி இன்னும் சிறப்பாக பெரிய அளவில் இந்தியாவில் நடத்தப்படும் என்றார் ஐபிஎல் சேர்மன் லலித் மோடி.

### ஐபிஎல் கிரிக்கெட் - டெக்கான் சார்ஜர்ஸ் சாம்பியன்

தென்ஆபிரிக்காவில் நடைபெற்ற ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி பட்டம் வென்றது. ஜோகன்னஸ்பர்கில் ஞாயிற்றுக்கிழமை பரபரப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் டெக்கான் அணி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் ராயல் சாலஞ்சர்ஸ் அணியை வென்றது. இந்த ஆட்டத்தில் முதலில் ஆடிய டெக்கான் 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 143 ஓட்டங்கள் எடுத்தது. தொடர்ந்து ஆடிய பெங்களூர் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 137 ஓட்டங்கள் எடுத்தது.

**கிப்ஸ் அரைசதம்** - டெக்கான் அணியின் அணித்தலைவரும், அதிரடி வீரருமான கில்கிறிஸ்ட் ஓட்டம் எடுக்காமல் ஆட்டம் இழந்தாலும், கிப்ஸம், சைமண்ட்ஸம் பொறுப்புடன் விளையாடினர். கிப்ஸ் 48 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 2 சிக்சர், 3 பவுண்டரிகளுடன் 53 ஓட்டங்களும், சைமண்ட்ஸ் 21 பந்துகளில் ஒரு சிக்சர், 4 பவுண்டரிகளுடன் 33 ஓட்டங்களும் எடுத்தனர்.

கும்ப்ளே அபாரமாகப் பந்துவீசி 4 ஓவர்களில் 16 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதால் டெக்கான் அணியால் அதிக ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை.

**ஓஜா அபாரம்** - பெங்களூர் அணிக்கும் தொடக்கம் சிறப்பாக அமையவில்லை. கடந்த 2 ஆட்டங்களில் சிறப்பாக விளையாடிய மனீஷ் பாண்டே 4 ஓட்டங்களுடன் வெளியேறினார். அதன்பின்னர் வந்தவர்களில் வான்டெர் மெர்வ் 32 ராஸ் டெய்லர் ஆகியோர் மட்டுமே விளையாடினர். ராபின் உத்தப்பா கடைசி கட்டத்தில் ஒரு சிக்சர் அடித்து நம்பிக்கை ஏற்படுத்தினாலும், ஆர்.பி.சிங் வீசிய ஆட்டத்தின் கடைசி ஓவரில் 15 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் அதிரடியாக விளையாட முடியாமல் ஏமாற்றம் அளித்தார். பி.பி. ஓஜா சிறப்பாகப் பந்துவீசி 3 விக்கெட்டுகளை சாய்த்து வெற்றிக்கு வித்திட்டார்.

இதையடுத்து கடந்த ஆண்டு போட்டியின் பட்டியலில் கடைசி இடம் பிடித்த டெக்கான் சார்ஜர்ஸ் 2009 ஐ.பி.எல் போட்டியின் பட்டத்தை வென்று ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

### சைமண்ட்ஸ் வீழ்த்திய 2 விக்கெட் திருப்புமுனை ஏற்படுத்தியது கும்ளே, கில்கிறிஸ்ட்

இந்தியன் பிரீமியர் லீக் இறுதிப் போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியில் இடம்பெற்ற அவுஸ்திரேலிய வீரர் ஆண்ட்ரு சைமண்டஸ், ஒரே ஓவரில் வீழ்த்திய 2 முக்கிய விக்கெட்டுகள் ஆட்டத்தில் திருப்புமுனையை ஏற்படுத்தியதாக கும்ளே, கிலகிறிஸ்ட் தெரிவித்துள்ளனர்.

தென்ஆபிரிக்காவில் பரபரப்பாக நடந்த ஐ.பி.எல் இருபது - 20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நிறைவடைந்தது. இதில் டெக்கான் சார்ஜாஸ் அணி 6 ஓட்டவித்தியாசத்தில் பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இதுகுறித்து டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் தலைவர் கில்கிறிஸ்ட் கூறுகையில், இறுதிப் போட்டியில் வெற்றி இலக்காக 144 ஓட்டங்கள் நிர்ணயித்ததன் காரணமாக வெற்றி யாவருக்கும் சாத்தியம் என்ற நிலையே காணப்பட்டது. ஆனால் 2 பந்துகளில் அடுத்தடுத்து 2 விக்கெட்டுகளை சைமண்டஸ் வீழ்த்தியது திருப்புமுனையாக அமைந்தது.

வெற்றி இலக்கை நோக்கி முன்னேறும் அணிக்கு அடுத்தடுத்து 2 விக்கெட்டுகள் சரிவது கடும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை என்றார்.

இதேபோல பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணியின் தலைவர் கும்ளே பேசுகையில், இந்த ஆடுகளத்தில் 144 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெறுவது கடினமான காரியம் அல்ல. என்றாலும் ஒரே ஓவரில் ராஸ் ரெய்லர், கோஹலி ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தது ஆட்டத்தின் முடிவை மாற்றியமைத்து விட்டது என்றார்.

இறுதிப்போட்டியில் போராடித் தோற்றாலும் லீக் மற்றும் அரையிறுதிப் போட்டியில் தமது அணி வீரர்கள் சிறப்பாக விளையாடிதாக கும்ளே பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

### ஐபிஎல் வெற்றியின் ரகசியம் என்ன?

செய்த தவறை திருத்திக் கொள்ளும் கலையும், முடியும் என்ற நம்பிக்கையுமே ஐபிஎல் போட்டியில் சாம்பியன் பட்டம் வெல்ல உறுதுணையாக இருந்தது என டெக்கான் சார்ஜர்ஸ் அணித் தலைவர் ஆடம் கில்கிறிஸ்ட் கூறியுள்ளார். அணியில் இடம்பெற்றிருந்த ரோஹித் சர்மா, பிரக்யான் ஓஜா ஆகியோரைப் பெரிதும் அவர் பாராட்டியுள்ளார்.

ஜோகன்னஸ்பர்கில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பரபரப்பான இறுதி ஆட்டத்தில் 6 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூர் ராயல் சாலஞ்சர்ஸ் அணியை டெக்கான் அணி தோற்கடித்தது. சாம்பியன் கோப்பையைப் பெற்றது. அதன்பின்னர் செய்தியாளர்களிடம் விக்கெட் கீப்பர் மற்றும் பேட்ஸ் மேனாகத் திகழும் கில்கிறிஸ்ட் கூறியது. '20 ஓவர் போட்டி என்றாலே நெருக்கடியான விளையாட்டுதான். அதில் எவ்வித நோக்கமும் இல்லாமல், எதிர்கொள்ளும் முதல் பந்திலிருந்தே அதிரடியாக விளையாடிவிட்டு, அவுட்டாகிவிட்டால் வெளியேறுவது என்றில்லாமல் கடந்த போட்டியில் செய்த தவறை திருத்திக்கொள் வேண்டும் என்ற எண்ணத்துடன் விளையாடி இம்முறை வெற்றி கண்டோம். அவுஸ்திரேலியா தொடர்ந்து 3முறை உலகக் கோப்பையை வென்றபோது விளையாடி உணர்வுடன் இந்த ஐபிஎல் போட்டியில் அணியை வழி நடத்தினேன். கடந்தமுறை போட்டியில் கடைசி இடத்துக்குத் மிகப் பெரிய வெற்றிகளைக் கண்டு வந்த எனக்கு அது மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. அதேசமயம் அது நல்ல அனுபவமாக இருந்தது. அவுஸ்திரேலியா கண்ட பல்வேறு வெற்றிகளில் நானும் ஒருவனாக இருந்ததை அதிஷ்டவசமாகக் கருதும் வேளையில், தோல்வி என்பது எனக்குப் புதிதாக இருந்தது. ஏன் அவ்வாறு நிகழ்ந்தது. அதிலிருந்து எப்படி மீளுவது என அப்போது சிந்திக்கத் தொடங்கியதன் விளைவு, தற்போது வெற்றிக்கு உறுதுணையாகியுள்ளது.'

**திறமையானவர் ரோஹித்** - ரோஹித் சர்மாவும், பிரக்யான் ஓஜாவும் இந்தியக் கிரிக்கெட் அணிக்கு சொத்துப்போன்றவர்கள். இருவரும் மிகவும் திறமையானவர்கள் என்பதை அவர்களது ஆட்டமே பறைசாற்றும். அதில் எந்த சந்தேகமும் இல்லை. துணை அணித்தலைவர் ரோஹித்துடன் பணியாற்றியதை மிகவும் அனுபவித்தேன். அணியை வழிநடத்துவதை அவர் விரும்புகிறார் என்றே நினைக்கிறேன்.

பிரக்யான் ஓஜாவைப் பொறுத்தவரை, கற்றுக் கொள்ளும் ஆவல் அவரிடம் அதிகம் உள்ளது. இருவரும் எதிர்காலத்தில் இந்தியாவின் மிகச் சிறந்த வீரர்களாகத் திகழ்வர் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை என்றார் கில்கிறிஸ்ட்.

### ஐ.பி.எல் அணிகள் சூப்பர் லாபம்

தென்ஆபிரிக்காவில் ஐ.பி.எல் இரண்டாவது 'டுவென்டி-20' தொடர் நடந்தது. டெக்கான் சார்ஜர்ஸ் அணி சாம்பியன் பட்டம் வென்றது. இதில் ஒவ்வொரு அணிக்கும் 'டிவி' ஒளிபரப்பு உரிமத்தின் பங்கு தொகையாக ரூ. 67.50 கோடி கிடைத்துள்ளது. பி.சி.சி.ஐ ரூ. 477 கோடி வருமானம் பெற்றுள்ளது. ராஜஸ்தான் அணி டிக்கெட் விற்பனையை சேர்த்து அதிகபட்சமாக ரூ 35.1 கோடி இலாபம் சம்பாதித்துள்ளது. இந்த முறை கடைசி இடம்பெற்ற கல்கட்டா நைட் ரைடர்ஸ் அணி டிக்கெட் விற்பனை மூலம் ரூ 25.8 கோடி வருமானம் பெற்றுள்ளது.

பரிசுத் தொகையாக முதலிடம் பெற்ற டெக்கான் அணிக்கு ரூ 48 கோடி இரண்டாமிடம் பெற்ற பெங்களூருக்கு 2.4 கோடி அரையிறுதியில் தோற்ற சென்னை, டில்லி அணிகளுக்கு தலா ரூ. 1.2கோடி, 5ஆம் இடம் பெற்ற பஞ்சாப் அணிக்கு ரூ. 80 இலட்சம், 6வது இடம் பிடித்த ராஜஸ்தானுக்கு ரூ. 70 இலட்சம். 7வது இடம் பெற்ற மும்பை ரூ. 50 இலட்சம், 8வது இடம் பெற்ற கோல்கட்டாவுக்கு ரூ. 40 இலட்சம் அளிக்கப்பட்டன. கணக்குகள் பார்த்த பின் அனைத்து அணிகளுக்கும் கிடைத்த இலாபம் பற்றி விரிவாக தெரிவிக்கப்பட உள்ளது.

### ஒக்ரோபரில் சாம்பியன்ஸ் லீக் - 12அணிகள் பங்கேற்பு

இந்தியாவில் வரும் ஒக்ரோபரில் சாம்பியன்ஸ் லீக் 'டுவென்டி - 20' தொடர் நடக்க உள்ளது. இதில் ஐ.பி.எல் பைனலில் பங்கேற்ற டெக்கான், பெங்களூரு அணிகள் மற்றும் புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்த டில்லி அணி என 3 இந்திய அணிகள் உட்பட 12 அணிகள் பங்கேற்கின்றன.

ஐ.பி.எல் சார்பில் கடந்த ஆண்டு சாம்பியன்ஸ் லீக் 'டுவென்டி - 20' தொடர் நடத்த திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் மும்பை பயங்கரவாத தாக்குதலால் தொடர் ரத்து செய்யப்பட்டது. இந்நிலையில் இந்த ஆண்டு சாம்பியன் லீக் தொடர் வரும் ஒக்ரோபர் 8 முதல் 23ஆம் திகதி வரை நடத்தப்பட உள்ளது.

இதில் ஐ.பி.எல் - 2இல் சாம்பியன் பட்டம் வென்ற டெக்கான் சார்ஜர்ஸ், 2வது இடம்பெற்ற பெங்களூரு ராயல் சாலஞ்சர்ஸ் அணிகள் நேரடியாக தேர்வு பெற்றன.

புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்த டில்லி டேர் டெவில்ஸ் என இந்தியாவில் இருந்து மொத்தம் 3 அணிகளும் தென்ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து நாடுகளின் 'டாப் - 2' 'டுவென்டி - 20' அணிகள் மற்றும் நியூசிலாந்து, இலங்கை, வெஸ்ட் இண்டீஸ் நாடுகளின் 'டுவென்டி - 20' சாம்பியன் பட்டம் வென்ற அணிகள் என மொத்தம் 12 அணிகள் பங்கேற்க உள்ளன.

**பாகிஸ்தான் இல்லை** - பாகிஸ்தான் அரசு அந்த நாட்டு கிரிக்கெட் வீரர்களுக்கு இந்தியா சென்று விளையாட அனுமதி கொடுக்காது. இதற்கான அணிகளை அனுப்ப வரும் 30ஆம் திகதி கடைசி நாள். இதுவரை பாகிஸ்தானில் இருந்து அணியை அனுப்புவதில் எந்த தகவலும் இல்லை என்பதால் அந்த அணி, இம்முறை தொடரில் பங்கேற்காது.

**மோடி உறுதி** - சாம்பியன்ஸ் லீக் போட்டிகள் குறித்து ஐ.பி.எல், தலைவர் லலித் மோடி கூறியது. கிரிக்கெட்டை உலக அளவில் கொண்டு சொல்ல



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 30ஆம் பக்கம்

**S.A.P HELPING HANDS உதவும் கரங்கள்**
மக்கள் சேவை சதாசிவ சேவை

**மூத்தோருக்கான சேவைகள்**
- இருப்பிட வசதிகள் ஒழுங்கு செய்தல்
- சமூக நல பணிமனைக்கு அழைத்துச் செல்தல்
- கோவில் / தேவாலயம் அழைத்துச் செல்தல்
- வைத்தியரிடம் அழைத்துச்செல்தல்
- கடைகளுக்கு அழைத்துச் செல்தல்
- எல்லா வகையான படிவங்களும் நிரப்புதல்
- கோடைகால சுற்றுலா

சதாசிவா - 416.454.2810
ASATHN@hotmail.com

**மற்றைய சேவைகள்**
> All Mortgage / Refinance
> Personal Business Loan
> All kind of Insurances
> Line of Credits
> Bankruptcy
> Accident Claims

இலவச ஆலோசனைகளும், ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்

# ஏப்பிரல், மே மாதங்களில் வீட்டு விற்பனையில் ஆரோக்கியம்




கனடியன் வீட்டுச்சந்தையில் முன்னேற்றம் இருப்பதனை கடந்த மாதமும் இந்தமாதமும் (ஏப்ரல் மற்றும் மே) காணக்கூடியதாக உள்ளது. 2009ஆம் ஆண்டு செப்ரெம்பரில் ஆரம்பித்த கீழ்நோக்கிய வீட்டு விலை, சிறிது சிறிதாக மக்களின் மனதில் கிலேசத்தை ஏற்படுத்தியதால், வீடு வாங்குபவர்கள் வீடு வாங்க எடுக்கும் தமது முடிவைத் தள்ளிப்போட்டிருந்தார்கள். கடந்த தடவை (1989 - 2007 வரை) வீட்டின்

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

**தொடர் - 299**

விலையில் ஏற்பட்ட நிலை ஏற்படலாம் என எதிர்பார்த்து, அச்சம் கொண்டு இருந்தமக்கள் கனடிய மத்தியவங்கியின் தொடர்ச்சியான வட்டி வீத இறக்கமானது கனடிய சரித்திரத்தில் ஏற்படாதளவு கீழ்மட்டத்திற்கு கொண்டு வரப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி ஏற்கனவே வாடகைக்கு இருக்கும் பலர், தமது முதலாவது வீட்டை வாங்க வந்திருப்பது வீட்டுச்சந்தையில் கடந்த இருமாதங்களாகக் காணக்கூடியதாக உள்ளது. வீட்டுச்சந்தையில் போதியளவு வீடு விற்பனைக்கு இல்லாததால், சந்தைக்கு வரும் நல்ல நிலையில், தரமாகப் பேணிக்காத்து வரும் வீடுகளை ஒன்றிற்கு மேற்பட்ட வீட்டுமுகவர்கள் பேரம் பேசக் கூடிய சந்தர்ப்பங்களைக் (Multiple Offers) காணக்கூடியதக உள்ளது. ஏப்ரல் மற்றும் மே, 2009 மாதங்களில் வீட்டு வியாபாரம் மிகவும் ஆரோக்கியமாகக் காணப்பட்டது.

தகுந்த விலையில் சந்தைப்படுத்தும் வீடுகள் இரு கிழமைகளிற்குள் விற்கப்படுவதனைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு முக்கிய காரணமாக, சந்தையில் போதியளவு வீடுகள் இல்லாததும் மற்றும் குறைந்த வட்டிவீதம் 5 வருடத்திற்குரிய நீண்டகால, மாறாத அடமானக் கடனிற்குரிய (Closed Mortgage for 5 Years Term) வட்டிவீதம் 3.60% இற்கு குறைவாகப் பெறக்கூடியதாக உள்ளது. $200,000 இற்கு அடமானம் பெறும்போது மாதாந்த கட்டுப்பணம் கிட்டத்தட்ட $840 (35 Years Amortization, 5 Years Term 3.5%). கனடிய பொருளாதாரம் குறிப்பாக ஒன்ராரியோவின் பொருளதாரம் இக்கட்டான நிலையில் இருக்கும்போது ஏப்ரல் மாதம் 8000 க்கும் மேற்பட்ட வீடுகள் Toronto Real Estate Board இனால் பராமரிக்கும் பகுதியில் விற்கப்பட்டுள்ளன. சராசரி வீட்டுவிலையும் மார்ச் மாதத்தை விட அதிகரித்துள்ளது. இது ஒரு ஆரோக்கியமான நிலைமை.

இருந்தபோதிலும், கனடிய நிதி அமைச்சர் Jim Flaherty இன் மே 26, 2009 இன் அறிக்கையின்படி கனடிய பொருளாதாரம், வருடத்திற்குரிய வரவு - செலவில் (Budget) செலவு வரவை விட $50 Billion ஆக அதிகரிக்கலாம் என்ற செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்று மாதத்திற்கு முன்பாக இந்த பெறுமதி $38 பில்லியனாக தெரிவிக்கப்பட்டது யாவரும் அறிந்தது.

இது கனடிய மக்களுக்கு பயத்தை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்தும் மக்கள் வேலையை இழந்து வருகின்றார்கள். இதற்கு முக்கிய காரணமாக வரியினாலும், வியாபாரத்தாலும் அரசிற்கு கிடைக்க இருக்கும் பணத்தின் அளவு குறைவதும் காரணமாகும்.

அத்துடன் தொழிலை இழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தே செல்கின்றது. இதனால் தொழில் இல்லாதவர்களின் கொடுக்கும் பணத்தின் அளவும் (Unemployment) அதிகரித்தே செல்கின்றது. இதனால் எதிர்காலங்களில் என்ன நடக்கும்

தொடர்ச்சி 23ஆம் பக்கம்


# HomeLife GTA Realty Inc., Brokerage*

**Independently owned & operated**

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

1711 McCowan Rd. #206, Toronto
Tel.: **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga
Tel.: **905.712.2666**

HOMELIFE HIGHER STANDARDS



**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

## New Condo. Available in Downtown Toronto

- Highrise Condo. Building
- 2 Bedrooms
- 2 Washrooms
- 1 Parking
- 1 Locker
- Balcony
- Hardwood / Ceramic Floor
- Loft (2 Floors)
- Higher Floor
- Quick Closing
- Spadina & Front - Toronto
- Special Price Only $385,000 (less than $375/sqft)

## Semi-detached House for Sale

- Morningside & Sheppard
- 3 Level Back split
- 4 Bedrooms
- 2 Full washrooms
- Good for extended Family
- Asking Only$219,900 (Better than renting)

## Condo. for Rent

- Wellesley & Jarvis
- 1 + Den Bedroom
- Only 1 year old building
- 24 hrs. security
- Indoor swimming pool, exercise room
- Available July /August

**Nantha Aiyadurai**
Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# நாடக உரையாடல்கள்

நாடகத்துக்கு இன்றியமையாதது உரையாடல். உரையாடல் இல்லாத ஊமை நாடகங்களும் உள்ளனவாயினும் தமிழர் நாடகத் தமிழையே போற்றி வளர்த்தனர். அந்த மரபில் கம்பர் இராமர் கதையை உரையாடல்களால் நகர்த்திச் செல்லும் உத்தி ஒப்பற்றது. கைகேயி - மந்தரை, கைகேயி - தசரதன் ஆகிய பாத்திரங்களின் உரையாடல்கள் நாடகக் காட்சிகளாகவே அமைக்கப்பட்டுள்ளன. அவைபோலவே,

- கைகேயி - இராமன் உரையாடல்
- கைகேயி - பரதன் உரையாடல்
- இராமனைத் திரும்பி வந்து ஆட்சிபுரியுமாறு பரதன் வேண்டுதல்
- இராமன் - குகன் சந்திப்பு
- இராமன் - வாலி உரையாடல்
- அசோகவனத்தில் இராவணனுடைய வேண்டுதலுக்குச் சீதை மறுத்தல்
- கும்பகருணன் இராவணனுக்கு அறிவுரை கூறுதல்
- கும்பகருணன் - வீடணன் விவாதம்

எல்லாமே தனித்தனி நாடகங்களாக நடிக்கக் கூடியவை.

### அசோகவன நாடகக் காட்சியின் ஒரு பகுதி இது:

(திரை விலகுகிறது. சீதை துயரத்துடன் இருக்கிறாள். காவல் அரக்கியர் சிறிது தள்ளி இருக்கின்றனர். அவர்களுக்குந் தெரியாமல் அனுமன் தோன்றி மறைவில் நின்று பார்க்கிறான். சீதை இராமனைப்பற்றிய பழைய நினைவுகளைச் சொல்லி ஆறுதல் அடைகிறாள். திரிசடையைத் தவிர மற்றைய அரக்கியர் தூங்கிவிட, சீதை திரிசடையிடம் தனக்குற்ற நல் நிமித்தம் பற்றிக் கூறுகிறாள். அனுமன் சீதையை அடையாளம் காண்கிறான். இக் கட்டத்தில் இராவணன் சீதையிடம் வருகிறான். இராவணன் - சீதை உரையாடல் தொடர்கிறது.)

இராவணன்: இன்று இறந்தன நாளை இறந்தன
என்தி றந்தரும் தன்மையி தால்எனைக்
கொன்று இறந்தபின் கூடுதி யோகுழை
சென்று இறங்கி மறந்தரு செங்கணாய்!
(சுந். கா: காட்சிப் படலம் 99)

உலகம் மூன்றும் ஒருங்குடன் ஓம்புமென்
அலகிற் செல்வத் தரசியல் ஆணையில்
திலக மேயுன்தி றத்துஅனங் கன்தரு
கலகம் அல்லது எளிமையும் காண்டியோ?
(சுந். கா: காட்சிப் படலம் 100)

சீதை: மேருவை உருவல் வேண்டின் விண்பிளந் தேகல் வேண்டின்
ஈரெழு புவனம் யாவும் முற்றுவித் திடுதல் வேண்டின்
ஆரியன் பகழிவல்லது அறிந்திருந்து அறிவி லாதாய்
சீரிய அல்லசொல்லி தலைபத்துஞ் சிந்து வாயோ?
(சுந். கா: காட்சிப் படலம் 113)

அஞ்சினை யாதலால் அன்றாரியன் அற்றம் நோக்கி
வஞ்சனை மானொன் றேவி மாயையால் மறைந்து வந்தாய்
உஞ்சனை போதி யாயின் விடுதிஉன் குலத்துக் கெல்லாம்
நஞ்சினை எதிர்ந்த போது நோக்குமே நினது நாட்டம்?
(சுந். கா: காட்சிப் படலம் 114)

இவ்விதம் காப்பியக் கதையை நாடகக் காட்சிகளாக அமைத்துக் கூறுகின்ற முறையால், காப்பியத்தைப் படிப்பவர்களுக்கு நாடகம் ஒன்றைப் பார்க்கின்ற உணர்வை ஊட்டி விடுகின்றார் இயக்குநர் கம்பர்.

### தனிக்கூற்றுகள்

நாடகங்களில் தனிக்கூற்றுகள் (soliloquies) இடம்பெறுவது வழக்கம். சேக்ஸ்பியர் இயற்கைக் காட்சிகளை மக்கள்முன் நிறுத்துவதற்கும் நாடகக் கதையோட்டத்தை விளக்குவதற்கும் பாத்திரங்களின் குணவியல்புகளைச் சித்திரிப்பதற்கும் தமது நாடகங்கள் பலவற்றிலே பாத்திரங்களைத் தனியாகப் பேச வைத்திருக்கின்றார். அவருக்குப் பல நூறாண்டுகள் முன்னர் வாழ்ந்த கம்பரும் பல இடங்களில் தமது பாத்திரங்களை யாருமில்லாத தனிப்பொழுதில் பேசவைத்திருக்கின்றார். மிதிலையில் அண்ணலும் அவளும் ஒருவரையொருவர் நோக்கிய பின் காதல்நோய் இருவரையும் வருத்துகின்றது.

கம்பர் சீதையின் காதலைப் புலப்படுத்த அவளது தனிக்கூற்றாகப் பல பாடல்கள் பாடுகின்றார். அவற்றில் ஒன்று இது:

இந்திர நீலமொத்(து) இருண்ட குஞ்சியும்
சந்திர வதனமும் தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவரை தோளு மேயல
முந்தியென் உயிரையம் முறுவல் உண்டதோ?
- மிதிலைக் காட்சிப் படலம் 57

இராமனின் முறுவல் சீதையை மயக்கியதைப் போலவே, சீதையின் முறுவலும் இராமனைத் தைத்திருக்கின்றது. பேசுகின்றான் தனியாக:

பூண் உலாவிய பொற்கல சங்களென்
ஏணில் ஆகத்து எழுதல என்னினும்
வாள்நிலா முறு வல்கனி வாய்மதி
காணல் ஆவதோர் காலமுண் டாங்கொலோ?

வண்ண மேகலைத் தேர்ஒன்று வாள்நெடுங்
கண்ணி ரண்டு கதிர்முலைத் தாம்இரண்(டு)
உண்ண வந்த நகையும்என்(று) ஒன்றுண்டாம் எண்ணுங்
கூற்றினுக்(கு) இத்தனை வேண்டுமோ?
- மிதிலைக் காட்சிப் படலம் 143,144

**தொடரும்**

**கவிஞர் வி. கந்தவனம்**






# வாழ்க்கை சுவர்க்கமாவது இனிய இல்லமொன்றில்...

## Elaguppllai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

## Dir: 416-276-1225  Off: 905-470-9800

**Email: esrinathan@trebnet.com**




**Neilson/ Mclevin**



**$244,900**
Town house, Bed rooms 3, Washrooms 2
Close To Schools, Shopping, Health Care, Recreation Centres,

**Lawrence/ Brimley**



**$255,000**
Detached Bungalow, Bed rooms 3+2 , Washrooms 2
Professionally Renovated Basement With Separate Entrance. Close To Schools And

**14th/9th Line**



**$277,000**
Detached 1½ Story Bed rooms 3, Washrooms 2
Lot Backs Open Space. Shopping, 407, Transportation, Hospital All Nearby.

**Medowvale /Sheppard**



**$289, 900**
Townhouse, Bed rooms 3, Washrooms 2
FWalk Out From Family Rm, Open Concept Design 14X13 Feet Deck Direct Access To The Garage

**Mccowan/14Thavenue**



**$310,800**
Link 2 Story, Bedrooms 3, Washrooms 2,
Fabulous Family Home On Beautiful Lot On Quiet Crescent.***

**Brimley/Steeles**



**$322,000**
Linmk 2 Story, Bedrooms 3 Wasroom 3,
Walk To Famous Schools, 3 Min. Walk To Steeles, One Bus To Bus Terminals,

**9th Line & Hoover Park Dr**



**$345, 000**
Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3,
Approx 1900 Square Feet, Close To Public School,Bus Station & Shopping Centre

**Denison/Featherstone**



**$369,000**
Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3,
New Hardwood Floor Throughout Main Floor. New Roof And New Windows

**Hwy 7/9th Line**



**$369,500**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3
Car Garage. Move-In Cond. Lots Of Upgrades,Bay Window

**9th Line & 16th Ave**



**$369,900**
Detached 2 story , Bed rooms 4 Washrooms 3,
Double Door Entry And High Ceiling. Close To 2000 Sq. Ft Many Upgrades

**Markham/Steeles**



**$399,000**
Detached 2 Story, Bedrooms 5, Washrooms 4,
Rare 5 Bedroom Home In A Quiet Neighborhood

**Finch And Staines**



**$399,900**
Detached 2 Storys, Bed rooms 4, Washrooms 3
Steps To School And Ttc.Fully Fenced Backyard. Double Car Garage

**W,Markham/S.14th**



**$399,900**
Link 2 Story, Bedrooms 4, Washrooms 3,
Fully Fenced Yard*Walk To Ttc/Schools/Shops/Restaurant/Church/Comm. Ctr/Park

**Middlefield/Highglen**



**$399,900**
Link 2 Story, Bedrooms 4 +1 Washrooms4
Finished Bsmt With Liv Rm, Bdrm And 4Pc Bath,

**Mccowan/Steeles**



**$448,888**
Link 2 Story, Bedrooms 4, Washroom 3
New Laminated Floor,New Kitchen & Kitchen Cabinets(Nov06),New Garage

**Mccowan & Elson**



**$454,900**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 4,
Finished Basement With Kitchen & Washroom Hardwood Floors Throughout

**Ninth Line And Steeles**



**$475,000**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3,
Well-Maintained & Mint Condition. 2400Sq.Ft. A Quiet Neighbourhood!

**Finch/Morningside**



**$475,900**
Detached 2 Story, Bedrooms 9+2 Washrooms 4+2
With Separate Entrance And W/O Basement. Ttc At Door Step. Close To School And

**14th Ave / 9th Line**



**$479,888**
Detached 2 Story Bed rooms 4 ,Was rooms 3 Fully
Fenced Yard With 2 Gates Main Floor Laundry With Access To Garage .

**Kennedy/Highglen**



**$799,000**
Detached 2 Story Bed rooms 4+4, Washrooms 5,
Professionally Finished Basement, Approx 4000 Sf Hardwood Floors

**Rossland/Salem**



**$299,900**
Detached 2 Story Bed rooms 3, Washrooms 3,
Walkout From Kitchen To Private Back Garden. Direct Access To Garage

**Sales of Businessl**




**$489,900**
Sale Of Business With Property Gas Stations.
Fall Service, Coin Car Wash And Large Convinience Store-

**Sales of Business**



**$219,900**
Sale Of Business Without Property Gas Stations.
Gas Station Plus Convenience Store Business In Gta

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## உறுப்புகளின் தன்மைகளும் அவற்றில் ஏற்படும் வியாதிகளும்

(சில வைத்திய நூல்களின் துணையுடன் எழுதுகின்றேன்)

நாம் உயிர்வாழ்வதற்கு சுவாசம் முக்கியமானது. இதற்குச் சுவாசப்பை (நுரைஈரல் - Lung) உறுப்பு மார்புப் பகுதியில் இடது, வலதாகப்பிரிந்து இருதயத்தின் அண்மையில் அமைந்துள்ளது. இதில் பல சுவாசத் தொகுதிப்பாகங்கள், (Respiratory Organs) காணப்படுகின்றன. அவையாவன

சுவாசப்பகுதி - Lung
பிரதான மூச்சுக்குழாய் - Main Bronchus
கிளை மூச்சுக்குழாய் - Branch Bronchus
நெஞ்சறைக் கூடு - Chest
மூக்குத்துவாரம் - Nasal Cavity
மூச்சுக்குழாய் வாய்மூடி - Epiglottis
நெஞ்சறை மடிப்புக்கள் - Lobe of Lung Space
மார்பு உள்வரிச்சவ்வுப்பை - Pleura

சுவாசப்பையைச் சூழவுள்ள இரட்டை சவ்வுப்பை - Pleural Space
மார்பு வயிறு பிரிமென்தகடு - Diaphragm
வாதனாளி - Trachea
மூக்குவாய்குழி - Nasopharynx
விலா எலும்பு - Rib
தொண்டை - Throat

என்பனவாகும். எனவே பெரும்பாலும் ஏற்படும் நோய்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

சுவாசமுட்டு - Asthma
மார்புவலி - Bronchitis
சளிக்காய்ச்சல் - Pneumonia
நுரைஈரல் சவ்வு அழற்சி - Pleuritis
நுரைஈரல் புற்று நோய் - Lung Cancer
நுரைஈரல் காச நோய் - Pulmonary Tuberculosis
இருமல் - Cough
இரத்தம் கலந்த சளி - Bloody Sputum
புரக்கடித்தல் - To Choke on something
சளியுடன் இருமல் - Dyspnoea
வரட்டிருமல் - Dry Cough
நெஞ்சுவலி - Pain in the Chest
ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

சுவாசப்பையில் காணப்படும் சுவாசக்குழல் வழியால் கரியமலவாயுவை (Carbondioxide) வெளியகற்றி சுவாசத்தின் மூலம் பிராணவாயுவை (Oxygen) பெற்று இருதயத்திற்கு அனுப்பிவைக்கின்றது. இத் தொழிலை மூச்சுக்குழல், கிளை மூச்சுக்குழல், நுண்கிளை, நாசித்துவார தொண்டைக் குரல்வளை ஆகியவை இந்த வேலையைச் செய்கின்றன.

எனவே நாம் காற்றினை சுவாசித்து உள்இழுக்கும் போது மார்ப்புப்பகுதி நன்கு விரிவடைகின்றது. காற்றை வெளி அனுப்பும்போது ஓரளவு மார்ப்புப்பகுதி சுருங்கிக்கொள்ளும். காற்று சுவாசக்குழல்




வழியால் நுரையீரலை (Lung) அடைகின்றது. பின்பு குறைந்த பிராணவாயுவுடன் கரியமலவாயுவை (Carbondioxide) வெளியகற்றுகின்றது.

நாம் சுவாசிக்கும் காற்று மூக்கின் முனைப்பகுதியில் உள்ள மயிர்களினால் துப்பரவு செய்யப்பட்டு, மூக்கின் உட்பகுதியில் சுரக்கின்ற திரவத்தினால் குளிராக்கப்பட்டு உள் சுவாசிக்கும் சுவாசக்குழல் வழியால் சுவாசப்பையை அடைகின்றது. எனவே நமது சுவாசப்பைக்கு கொண்டு செல்லப்படுகின்ற காற்று குளிர்நிலை அற்றுக் காணப்பட்டால் அதன் வெப்பத்தினால் சுவாசப்பை பாதிக்கப்படும். அத்துடன் இத்திரவத்தில் காணப்படும் ஒருவகை கிருமிநாசினி எந்தவகையான கிருமிகளையும் உள் செல்லாது தடுக்கும் சக்திவாய்ந்தது. அந்த கிருமிநாசினி லைசால் (Lysol) ஆகும்.

மேலும் சில வியாதிகளைப் பற்றி பார்ப்போம். நாம் மழையினாலோ அன்றி நீராடும் போது அல்லது குளிர்காற்றின் மூலமாகவோ நமது தேகம் குளிரினால் தாக்கப்படும் போது நுரையீரலில் அதாவது சுவாசப்பையில் சளித்தன்மை ஏற்படுகின்றது. இதனால் மூச்சுக்கஷ்டம் ஏற்பட்டு இருமலும் கூடிக்காணப்படும். அத்துடன் நமது தேகத்தில் உள்ள துவாரங்கள் அடைபட்டுச் சுரமும் ஏற்பட வாய்ப்புண்டு. இதனால் சளி அதிகமாகி தடித்து மஞ்சள் நிறக்கோழையாக (Phlegm) மாறுகின்றது. மார்பின் பகுதியில் அடர்த்தி ஏற்பட்டு வெப்பத்தன்மை அதிகரிப்பதினால் சுரம் ஏற்பட்டு வாய்பகுதியும் வரட்சித் தன்மையாக இருக்கும். இந்நிலையில் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள தங்கள் வைத்தியர்களை நாடிக்கொள்ளவும்.

சாதாரண இருமல் இருப்பது நன்று. இதனால் தொற்றுக்கிருமிகள் உள்செல்லாது தடுப்பதுடன், சுவாசப்பையைச் சுத்தப்படுத்தி அடைப்புக்களை இலகுவில் அகற்றும்.

இருமும்போது இரத்தம், சளி போன்றவை வெளிவந்தால் அது நுரையீரலில் அல்லது குடல்பகுதியில் உள்ள வியாதியின் அறிகுறியாக இருக்கும். தொடர்ந்து இருமல் காணப்பட்டால் அது வியாதியாகிவிடும். நமது நுரையீரலின் மூச்சுக்குழாய்கள் பாதிக்கப்படுவதினால் நாம் சுவாசிக்கும் காற்று சுவாசக்குழல் மூலம் செல்வது கஷ்டமாக இருக்கும். மனஅழுத்தம், ஒவ்வாமை, சளி இதனால் சவ்வு போன்ற நிணநீர் (மியூக்கஸ் - Mucus) சுரந்து அதனால் குழாய்களின் சுவர்கள் வீக்கமடையும். இத்தன்மையால் சுவாசத்தில் தடை ஏற்படும்.

காற்றின் தடையை நீக்க நாம் இருமுகின்றோம். அவ்வேளையில் மூச்சு விடுவதற்குக் கஷ்டப்படுகின்றோம். இந்த மூச்சுத் திணறல் சில நிமிடங்கள் அல்லது சில நாட்கள் இருக்கும். இந்நிலையை மூச்சு முட்டு, ஈழை, தொய்வு, (Asthma) என கூறப்படுகின்றது. இதனால் உயிர் ஆபத்தில்லை. தங்கள் வைத்தியர்களிடம் சென்றால் நன்கு பரிசோதித்து எத்தன்மையான மூச்சு முட்டு என்பதை அறிந்து தகுந்த சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்நிலை சுற்றாடல், புறச்சூழலால் ஏற்படும். பரம்பரையாகவும் வரும் எனக் கூறப்படுகின்றது.

அடுத்து சளிச்சுரம் (Pneumonia - நீமோனியா). நீமோனியா வருவதற்குப் பல காரணங்கள் உண்டு. நமது நுரையீரலில் உள்ள காற்று சுவாசஉறுப்பின் உட்பைகளில் (Air Sacs) சீழ் (Pus) சளி அல்லது வேறு நிணநீர் (Mucus), வெண்சீவ அணுக்கள் (WBC) ஆகியவை நிரம்பிவிட்டால் இரத்தத்திற்குச் பிராணவாயு கிடைப்பது சிரமமாகிவிடும். இந்த வியாதி இரத்தத்தில் கலந்து உடல் முழுப்பகுதிக்கும் எளிதாகப் பரவிவிடும். சளிச்சுரத்தில் பெரும்பாலும் நுரையீரலின் இளையங்களில் தாக்கம் ஏற்பட்டு வீக்கம் காணப்படும்.

லோபார் (Lobar pneumonia) நீமோனியாவால் நுரையீரலின் மடல் (Lobe)முழுமையாக பாதிக்கப்படும். பிராங்கோ நீமோனியாவால் (Bronchopneumonia) நுரையீரலில் உள்ள காற்றுக்குழாய்கள் மட்டும் பாதிக்கப்படும் எனக் கூறப்படுகின்றன. இச்சளிச்சுரம் ஸ்பெறப்ரொ கொக்கஸ் (Streptococcus) ஹெமொபிலஸ் (Hacmo Philus) ஆகிய இருவகையான பக்ரீரியாவால் உண்டாகின்றது எனவும் கூறப்படுகின்றது. இதன் குணம் குறியை கவனித்தால் திடீரென காய்ச்சலும் சளியுடன் கூடிய இருமலும் காணப்படும். இந்நிலை ஏற்படும் போது வைத்தியர்களை அணுகி தகுந்த சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளவும்.

அடுத்துவருவது காசம். TB (Tuberculosis) இது மைகொபக்ரீரியா ரிபொக்குலோசிஸ் (Mycobacterium Tuberculosis) ஆல் உண்டாகின்றது. எவருக்கும் தொற்றும் தன்மையானது. மனிதருக்கு மனிதர் இருமல், தும்மல், மூச்சு ஆகியவற்றால் TB பக்ரீரியா இலகுவில் பரவி இவ்வியாதி ஏற்படும்.

சுவாசப்பையில் உயிர்ப்பான TB உள்ள ஒருவருடன் நெருங்கிப் பழகினால் அல்லது தொடுகையின் பின்னர் தொற்று ஏற்படும் தன்மையுடையது. காற்றின் உதவியால் பரவக்கூடியது. அதிக மக்கள் கூட்டமாக வாழும் இடம் அல்லது தொழில் செய்யும் நிலையங்கள், காற்றோட்டம் இல்லாத, குறைவான மருத்துவக் கவனிப்பற்ற இடங்களிலும் தொற்றவாய்ப்புண்டு.

TB கிருமிகள் சுவாசத்தின் மூலம் உள் செல்லுகின்றது. அவை நுரையீரலில் தங்கி சிறிய தொற்றை ஏற்படுத்தும். வழமையாக வெளிப்படையான அறிகுறிகள் இருக்காது. உடலில் TB கிருமிகள் சுற்றி சுவர்களை வளர்க்கின்றது. இதனால் அவைகள் வளர்ச்சியை நிறுத்திட நிர்ப்பந்தப்படுகின்றன. ஆனால் அந்தக் கிருமிகள் உடலில் தொடர்ந்து தங்குகின்றன. அப்படி நிலை ஏற்பட்டிருந்தால் TB தொற்று உண்டு எனக் கூறப்படுகின்றது. தொடர்ந்து உறக்க நிலையில் கிருமிகள் இருந்தால் எதுவித அறிகுறியும் இல்லாதிருப்பதுடன் எவருக்கும் நோயினைப் பரப்பமுடியாது. ஆனால் உறக்கமான TB கிருமிகள் தொற்றி உரிய இடத்தைப் பெலவீனமடையச் செய்தால் TB கிருமிகள் வளரவும், அதிகரிக்கவும் தொடங்கும். இதனை உயிர் உள்ள TB எனப்படும். இதற்குரிய அறிகுறிகள் தோன்றி மற்றோருக்கும் பரவக்கூடியதாக இருக்கும்.

இதன் அறிகுறி மேலும் கூடினால் ஈரலிப்பான சளியுடன், நெஞ்சுநோ ஏற்படுவதுடன் சுவாசிப்பதற்கும் கஷ்டமாகவும் இருக்கும். அத்துடன் பசியின்மை, நிறைகுறைவு இரவு வேளையில் வியர்வை, களைப்பு, சுரம் என்பன காணப்படும். எனவே இப்படியான தன்மைகள் ஏற்படும் போது உரிய வைத்தியர்களிடம் பரீட்சித்து தகுந்த சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் இருமும் போது சிலருக்கு இரத்தம் வருவதைக் காணக்கூடியதாக இருக்கும். இது நுரையீரல் காசநோய், நுரையீரல் புற்றுநோய், இருதயநோயால் நுரையீரல் பாதிக்கப்பட்டால் இருமும்போது இரத்தம் வெளிவரலாம். மூச்சுக்குழாய் அழற்சி, மூச்சுக்குழாய் இரத்தநாள அடைப்பு, மூச்சுக்குழாய் கட்டிகள், மூச்சுக்குழாய் அயல்பொருள் என்பவற்றாலும் இருமும்போது இரத்தம் வர வழியுண்டு. எனவே தங்கள் வைத்தியர்களிடம் சென்றால் நன்கு பரீட்சித்து தகுந்த சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளமுடியும்.


**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**



D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013



நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு:**416.939.2013**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)

# புற்றுநோய் (Cancer) பற்றிய புதிய தகவல்கள்

அமெரிக்காவிலுள்ள ஜோன் ஹொப்கின்ஸ் வைத்தியசாலை பின்வரும் தகவல்களை வெளியிட்டுள்ளது. இதுவரை காலமும் கீமோ தெரபி (Chemotherapy) என்ற இரசாயன பரிகாரமுறையை மட்டுமே பயன்படுத்தி வந்த வைத்தியசாலை, மாற்றுப்பரிகார வழியுண்டென்பதை எடுத்துக் கூறுகிறது.



1. மனிதர் யாவரது உடலிலும் புற்று நோய்க்கலங்கள் உள்ளன. இவை பிரமாண சோதனைகளின்போது (Standard Tests) வெளிப்படமாட்டா. ஆனால் சில பில்லியன் கலங்களாக இவை பெருகிய பின்னரே சோதனைகளின் போது தெரிய வரும். பரிகாரத்தின் பின்னர் ஒரு புற்று நோயாளியைப் பார்த்து இனி உங்கள் உடலில் ஒரு புற்று நோய் கலமுமில்லை என்று ஒரு வைத்தியர் கூறுவார். அப்படியான நிலையில் உண்மையில் கலங்கள் சில இருக்கும். ஆனால் பரிமாண சோதனைகளினால் இவற்றைக் கண்டறிய முடியாது சிறிதளவாகவே காணப்படும்.

2. ஒருவரது வாழ்நாளில் புற்றுநோய்க் கலங்கள் 6 முதல் 10 தடவைகள் தோன்றும்.

3. ஒருவரது நிர்ப்பீடனத் தொகுதி (Immune System) வலுக்கூடியதாக இருக்கும் போது இக்கலங்கள் அழிக்கப்பட்டு மேலும் ஒரு கட்டியாக வளராமல் தடுக்கப்படும்.

## - துறையூரான் -

4. ஒருவருக்கு புற்றுநோய் இருந்தால் அதற்குப் பல போசாக்கு குறைபாடுகள் உள்ளன எனப் புலனாகும். இதற்கு பரம்பரையலகு, சுற்றுச் சூழல், உணவு, வாழ்க்கை முறை ஆகியன காரணங்களாகும்.

5. பல போசாக்குக் குறைபாடுகளை தீர்ப்பதற்கு நிர்ப்பீடனத் தொகுதியை வலுப்படுத்தக்கூடிய சாப்பாடு மாற்றமும், நிறைவான உணவுகளும் தேவை.

6. இரசாயனப் பரிகாரத்தில் அல்லது சிகிச்சையில், விரைவாக அதிகரிக்கும் புற்றுக்கலங்கள் நஞ்சூட்டப்படுகின்றன. அப்போது என்புமச்சை, குடல் வழிகளிலுள்ள நல்ல கலங்களும் அழிக்கப்படுகின்றன. இதனால் ஈரல், சிறு நீரகங்கள், இதயம், நுரையீரல் ஆகிய அங்கங்களும் பாதிப்படையலாம்.

7. கதிர்வீச்சு சிகிச்சையின்போது புற்றுக்கலங்கள் அழிக்கப்படும் வேளையில் ஆரோக்கியமான கலங்கள், இழையங்கள், அங்கங்கள் ஆகியன எரிபடும், தழும்படையும் அல்லது அழிக்கப்படும்.

8. இரசயன சிகிச்சையும் கதிர்சிகிச்சையும் ஆரம்பத்தில் புற்றுநோய் கட்டியின் அளவைக் குறைக்கும். ஆனாலும் தொடர்ந்தும் இச்சிகிச்சைகளால் கட்டியினளவு குறையாது.

9. மேற்கூறிய சிகிச்சைகளினால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மையால் நிர்ப்பீடனத்தொகுதி வலுவிழக்கக் கூடும். அல்லது அழிக்கப்படக்கூடும். இதனால் ஒருவருக்குப் பல்வேறு தொற்றுக்களும் சிக்கல்களும் ஏற்படலாம்.



10. இச்சிகிச்சைகளினால் புற்றுக்கலங்கள் விகாரமடைந்து எதிர்ப்புச் சக்தியைப் பெற்றுப் பின் அழிக்கமுடியாமல் போகலாம். அறுவைச் சிகிச்சையினால் புற்றுக்கலங்கள் பிற இடங்களுக்குப் பரவலாம்.

11. புற்றுக்கலங்கள் பெருகுவதற்குத் தேவையான உணவுகளைத் தவிர்த்து, அவற்றைப் பட்டினி போடுவது ஒரு சிறந்த வழியாகும்.

**புற்றுக்கலங்கள் உண்ணும் உணவுகள்**

1. இனிப்புக்குப் புற்றுக்கலங்கள் பெருகும். எனவே இனிப்பைத் தவிர்த்து முக்கிய உணவைப் புற்றுக் கலங்களுக்குக் கொடுக்காமல் இருக்கலாம். இனிப்புக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் நியூற்றாசுவீற், ருவின்சுகர், ஸ்விலெண்டா போன்றவற்றில், 'அஸ்பட்டம்' என்ற இராசாயனப் பொருள் இருந்தால் அவற்றைப் பயன்படுத்தக்கூடாது. 'அஸ்பட்டம்' என்ற பொருளில் கெடுதல்கள் பற்றி இன்னுமொரு கட்டுரையில் விரிவாகப் பார்ப்போம். இவற்றுக்குப் பதிலாகச் சிறிதளவு தேன் அல்லது பாகு பாவிக்கலாம். அத்துடன் மேசை உப்புக்குப் பதிலாகக் கடலுப்புப் பாவிக்கலாம்.

2. பால் உடலில் சளியை உண்டாக்கும். குறிப்பாகக்குடல் வழியில் இது கூடுதலாக உண்டாகும். சளியில் புற்றுக் கலங்கள் பெருகும். எனவே பாலுக்குப் பதிலாக இனிப்பற்ற சோயாப்பால் பாவித்துப் புற்றுக் கலங்களை பட்டினி போடலாம்.

3. புற்றுக் கலங்கள் அமிலச் சூழலில் நன்கு பெருகும். சில இறைச்சிகள் அமிலத்தன்மையுள்ளவை. எனவே மீன் அல்லது சிறிதளவு கோழி சாப்பிடலாம். இறைச்சியில் நுண்ணுயிர் கொல்லிகள், வளர்ச்சிக்கான கோமோன்கள், ஒட்டுண்ணிகள் உள்ளன. இவையாவும் புற்றுநோயாளருக்குக் கேடுகளை விளைவிக்கும்.

4. உடன் காய்கறிகள், சாறுகள், முழுத்தானியங்கள், விதைகள், பருப்புகள், சில பழங்கள் கொண்ட 80% உணவும் காரத்தன்மையான சூழலை ஏற்படுத்தும். சமைத்த உணவுகள் 20%, உட்கொள்ளவும். உடன் காய்கறிகளின் சாறுகள் உட்கொண்ட 15 நிமிடத்தில் ஆரோக்கியமான கலங்களை அடைந்து துரித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும். ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று தடவைகளாவது உடன் காய்கறிகளைச் சாப்பிடவும். காய்கறிகளிலுள்ள நொதியச்சத்துகள் (Enzymes) 40 பாகை செல்சியஸ் வெப்பத்தில் அழிந்து போய்விடும்.

5. உயர்வான கபேன் (Caffeine) தேநீர், கோப்பி, சொக்லேட் ஆகியவற்றைத் தவிர்க்கவும். பச்சைத் தேயிலையில் புற்றுநோய் எதிர்ப்புச் சக்திகள் இருப்பதால் அதைப் பயன்படுத்தவும். குழாய் நீரில் சில தொட்சின்களும் உலோகங்களுமிருப்பதால் சுத்திகரிக்கப்பட்ட அல்லது வடிகட்டப்பட்ட நீரையே குடிக்கவும்.

6. இறைச்சிப் புரதம் சமிகரிப்பதற்குப் பெருமளவு நொதியச்சத்துத் தேவைப்படும். சமிகரிக்கப்படாத இறைச்சி குடலில் தங்கியிருந்து பழுதடைந்து நச்சுத்தன்மை அதிகரிக்கும்.

7. புற்றுக்கலங்கள் மிகவும் தடித்த புரதக்கவசத்தைக் கொண்டிருக்கும். குறைவாக இறைச்சி சாப்பிடுவதால் கூடியளவு நொதியங்கள் இப்புற்றுக் கலங்களை தாக்கியழிப்பதற்குக் கிடைக்கும். அத்துடன் புற்றுக் கலங்களைத் தாக்குவதற்கு உடலிலுள்ள கொல் கலங்களும் (Killer cells) சிறப்பாகச் செயலாற்றும்.

8. சில குறைநிரப்பி உணவுகளான ஐபி 6, எசியாக், அன்ரி ஒக்சிடன்ஸ், விற்றமின்கள், உலோகச்சத்துக்கள் EFA போன்றவை, புற்றுக்கலங்களை அழிப்பதற்கு உடலின் கொல் கலங்களுக்கு உதவி செய்யும். விற்றமின் E போன்ற குறை நிரப்பிகள், உடலானது இயற்கையாக, தேவையான, சிதைந்த கலங்களை இறக்கச் செய்யும் செயற்பாட்டை ஏற்படுத்தும்.

9. புற்றுநோயானது உடல், மனது, ஆத்மா ஆகியன சம்பந்தப்பட்டது. எனவே இந்நோயுள்ளவர் எதுவும் நன்மைக்காகவே என்ற மனப்பான்மையும் செயல்பாட்டையும் உடையவராக இருந்தால் தப்பிப்பிழைக்கலாம். கோபம், வெறுப்பு, மனவருத்தம் ஆகியவற்றால் உடலில் கூடிய அமிலச் சுற்றாடல் தோன்றும். அன்பும் பரிவுமுள்ள வாழ்க்கையைப் பழகிக் கொள்ள வேண்டும். வாழ்க்கையை மகிழ்வோடு நெருக்கடிகள் இல்லாது வாழப்பழகவும்.

10. கூடியளவு ஒட்சிசனுள்ள சூழலில் புற்றுக்கலங்கள் பெருகமாட்டா. எனவே கலங்களுக்குக் கூடிய ஒட்சிசன் செல்வதற்கு உடற்பயிற்சியும், ஆழ்ந்த மூச்சுப் பயிற்சியும் தேவை. புற்றுக்கலங்களை அழிப்பதற்கு ஒட்சிசன் சிகிச்சையும் செய்யப்படுகிறது.

**மைக்குரோவே (Microwave) பாவனை-பற்றி Dr. எட்வேட் பூஜிமோட்டோ பின்வருமாறு கூறுகிறார்.**

பிளாஸ்ரிக் கொள்கலன்களை

தொடர்ச்சி 29ஆம் பக்கம்

H1N1 ப்ளூ வைரஸ்

**நீங்களும் உங்கள் குடும்பமும் ஆரோக்கியமாக இருக்க உதவ நீங்கள் அறியவேண்டியவை**

அனைத்து ப்ளூ வைரஸ்களையும் தாக்க மிக சிறந்த வழி நல்ல கை சுகாதாரம் தான். உங்கள் கைகளை சோப் மற்றும் நீரால் முற்றிலுமாகவும் அடிக்கடியும் கழுவவும்.

அல்கஹாலை அடித்தளமாகக் கொண்ட கைத்துப்புரவி (ஜெல் அல்லது துடைப்பி) வேலையிடத்தில், வீட்டில் மற்றும் வாகனத்தில் கைவசமாக வைத்திருக்கவும். செயலாற்றலுடன் இருக்க குறைந்தது 60% அல்கஹாலாவது இருக்கவேண்டும்.

உங்கள் சட்டைக்கை அல்லது டிஷ்யுவுக்குள் இரும்பவோ தும்மவோ செய்யுங்கள், கையில் அல்ல. டிஷ்யுவை உடனடியாக எறிந்துவிடுங்கள்.

பொதுவாக தொடப்படும் மேற்பரப்புகளையும் சாமான்களையும் சுத்தமாகவும் தொற்றுநீக்கியும் வையுங்கள்.

மேலதிக தகவலுக்கு வருகைதாருங்கள்:ontario.ca/flu
அல்லது ஸர்விஸ்ஒன்டாரியோ இன்போலைனை அழையுங்கள்
**(ServiceOntario INFOline):**
**1-800-476-9708**
டிடிஒய் **(TTY): 1-800-387-5559**

நோய்குறிகள் இருந்தால், டெலிஹெல்த் ஒன்டாரியோ-வை அழையுங்கள்
**(Telehealth Ontario):**
**1-866-797-0000**
டிடிஒய் **(TTY): 1-866-797-0007**
அல்லது உங்கள் உடல்நல கவனிப்பு அளிப்பவரை தொடர்புகொள்ளுங்கள்.

Ontario

# அமெரிக்கா - கனடா எல்லையினை கடக்க அனுமதிக்கும் புதிய சாரதி அனுமதி பத்திரம்

## கனடிய தகவல் தொடர் 102

### (ENHANCED DRIVER'S LICENSE)

**இம் மாதம் யூன் 01, 2009 இலிருந்து அமுல்படுத்தப்படும் புதிய நடைமுறை**

கனடாவின் பிரஜை ஒருவர் முன்னர் தரைமார்க்கமாக எல்லை கடந்து அமெரிக்கா சென்று வரவேண்டுமானால் இதுவரை காலமும் கையில் கனடாவின் பிரஜா உரிமை அட்டையினை எடுத்து சென்றால் மட்டும் போதுமானது என்ற நிலைமை மாறி இம்மாதம் யூன் 01, 2009 இலிருந்து கடவுச்சீட்டு (பாஸ்போட்) இல்லாது தரை மார்க்கமாக எல்லையினை கடந்து செல்ல முடியாது என்ற சட்டமூலம் உருவாக்கப்பட்டு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இக் கடவுச்சீட்டினை எந்நேரமும் வாகனத்தில் கொண்டு திரிதல் என்பது அடிக்கடி சென்று வருபவர்களுக்கு சிரமமாக இருக்கும் என்பதால் மேலதிகமாக ஒரு புதிய சாரதி அனுமதி பத்திரத்தினை (Enhanced Driver's License) தாங்கள் விரும்பினால் ஒன்ராரியோ மாகாண அரசில் விண்ணப்பித்து பெற்று வைத்திருந்தால் இலகுவாக இம்மேலதிக சாரதி அனுமதி பத்திரத்துடன் அமெரிக்கா சென்று வரலாம் என்ற சட்டமூலம் ஒன்று இம்மாதத்தில் இருந்து நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.


சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


ஒன்ராரியோ மாகாணத்திலிருந்து வருடம் ஒன்றுக்கு 35 மில்லியன் வாகனங்கள் எல்லையினை கடந்து தரை மார்க்கமாக அமெரிக்காவினுள் செல்வதால் அடிக்கடி பிரயாணம் செய்பவர் களுக்கு என உருவாக்கப்பட்டு இம்மாதத்தில் இருந்து அமுலில் கொண்டு வரப்படுவதே இப்புதிய செயல்முறைதிட்டம் ஆகும்.

**இம்மேலதிக சாரதி அனுமதி பத்திரத்துக்கு** (Enhanced Driver's Licencse) **விண்ணப்பம் செய்து பெற தகுதியானவர்கள் யார்?**

1. கனடாவின் பிரஜையாக இருந்தல் வேண்டும்.
2. கனடாவில் ஒன்ராரியோ மாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
3. ஒன்ராரியோவின் வலிமையான சாரதி அனுமதி பத்திரம் வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும். [இது G-1 அல்லது G-2, ஆகவும் இருக்கலாம்.]
4. பிரயாணம் செய்ய சட்டரீதியான தடை இல்லாதவராக இருத்தல் வேண்டும்.

**எப்படி இப்பத்திரம் இருக்கும்?**
**எப்போது தொடக்கம் இப்பத்திரம் அமுல்படுத்தப்படுகின்றது?**
**எப்படி இதனை பெறுவது? தகவல்களை எப்படி பெறுவது?**

ஒன்ராரியோ மாகாணத்தில் புதிதாக வழங்கி வரும் சாதாரண சாரதி அனுமதி பத்திரம்




போலவே எதுவிதமான வித்தியாசமும் இல்லாது தங்களின் படத்துடன் இருக்கும். "Enhanced Driver's Licence" என ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழியிலும் எழுதப்பட்டு இருக்கும். சாரதி அனுமதிப் பத்திரம் மாதிரி எந்நேரமும் இலகுவாக கொண்டு திரியலாம். கடந்த மே 19, 2009 இலிருந்து விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு, யூன் 01, 2009 இலிருந்து இதனை அமெரிக்க எல்லையினை கடப்பதற்கு கடவுச்சீட்டுக்கு பதிலாக பயன்படுத்தலாம். ஒன்ராரியோ மாகாண அரசு தங்களின் இம்மாகாணத்தின் மேலதிக சாரதி அனுமதிப்பத்திரத்தினை பயன் படுத்தி அமெரிக்காவுக்கு சென்றுவர கனடிய, அமெரிக்க மத்திய அரசுடன் ஒப்பந்தங்கள் செய்து சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதனை பெறவேண்டுமாயின் ரொறொன்ரோ வில் பின்வரும் இரு மாகாண அரசின் அலுவலகங் களிலும் மட்டும் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். சாதாரணமாக சாரதி அனுமதிப் பத்திரம் பெறும் இடங்களிலோ அல்லது போக்குவரத்து அமைச்சின் காரியாலயங்களிலோ இதனை பெறமுடியாது.

1. Service Ontario
   777, Bay Street
   Suite M212, Market Level
   Toronto, ON M5G 2C8

2. Service Ontario
   47, Sheppard Ave., East, 4Th Floor
   Toronto On M2N 7E7

மேலதிக தகவல்களை பெற வேண்டுமாயின் 416.235.2999 அல்லது 1.800.387.3445 என்ற தொலைபேசிக்கு அழைக்கலாம். இதேபோல் www.serviceontario.ca என்னும் இணைய தளத்தினுள் சென்றும் தகவல்களை பெறலாம்.

ஆரம்பத்தில் $40 டொலர் கட்டணமாக செலுத்துதல் வேண்டும். அத்துடன் மேலதிமாக குறிப்பிட்ட காலத்திற்கு புதுப்பிக்கும் கட்டணமாக $75டொலர் செலுத்த வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்தினையும் பரிசீலனை செய்யும் போது சுமார் பதினைந்து நிமிடங்கள் நேர்முகபரீட்சை நடத்தப்படும். இங்கு விண்ணப்பத்தில் தகவல்கள் வழங்குவதுடன் மேலதிகமாக

- சட்ட ரீதியான பிரஜா உரிமை பற்றிய நிருபணம்.
- சட்ரீதியான, வலிமையான மாகாண அரசின் சாரதி அனுமதி பத்திரம் தொடர்பான நிருபணம்.
- மேலதிக அடையாள அட்டையினூடாக ஆள் அடையாளம் உறுதிபடுத்தல் (கடவுட்சீட்டு, மருத்துவ சுகாதார அட்டை, மாணவர் அட்டை, திருமண அத்தாட்சி பத்திரம் போன்றவை) ஆகிய மூன்று நிலைகளிலும் நிருபணம் செய்த பின்னர் ஏதாவது கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்டவரா? என்பதனை உறுதிபடுத்தும் முகமாக பின்வரும் மூன்று கேள்விகளுக்கு பதில் வழங்கி கைச்சாத்திடல் வேண்டும். அவையாவன பின்வருமாறு:

**1. Are These outstanding criminal charges against you for an indictable offense in Canada?** தங்களுக்கு எதிராக கனடாவில் ஏதாவது கிரிமினல் குற்றசாட்டுகள் உள்ளதா?

**2. Are you forbidden to leave Canada based on conditions impose by a Canadian court or a parol board in Canada or by law?** கனடாவினை விட்டு வெளியேறக் கூடாது என சட்டத்தினால் அல்லது நீதிமன்றத்தினால் கனடாவில் தடை செய்யப்பட்டவரா?

**3. Are you currently subject to a sentence of imprisonment in Canada?** கனடாவில் சிறையில் இருக்க வேண்டிய தீர்ப்பு வழங்கப்பட்டவரா?

மேற்குறிப்பிட்ட தகவல்களினை உறுதிபடுத்தல் என்பது நேர்முக பரீட்சையில் உறுதிபடுத்தப்பட்ட பின்பு தற்காலிகமான பத்திரம் 90 நாட்களுக்கு வழங்குவார்கள். (தற்காலிகமான பத்திரத்துடன் எல்லை கடக்க முடியாது) பின்னர் நிரந்தரமான சாரதி அனுமதி பத்திரம் போன்ற அட்டையினை தபாலில் அனுப்பி வைப்பார்கள்.

இதனை வைத்து அமெரிக்க எல்லையில் குடிவரவாளர்களின் மின் கணினியில் பரிசோதனை செய்து பார்க்கும் போது எல்லையினை கடப்பவர் பற்றிய விவரங்களையும் தெளிவாக பார்த்து அறிந்து கொள்வார்கள். இப்பத்திரம் கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கு தரைமார்க்கமாக பிரயாணம் செய்பவர்கள் எல்லையினை கடப்பதற்கு மட்டும் பிரயோசனப் படுத்தலாமே தவிர சாரதி அனுமதி பத்திர இலக்கம் அதில் குறிப்பிட்டு இருந்தாலும், சாரதி அனுமதி பத்திரத்துக்கு பதிலாக ஏற்று கொள்ளப்படமாட்டாது.

சில நேரங்களில் ஏதாவது வழியில் சாரதி அனுமதி பத்திரம் ரத்து செய்யப்பட்டால், இப்பத்திரமும் ரத்து செய்யப்பட்டு விடும்.




நிப்ளக்ஸ் REFLEX
COPY & DIGITAL PRINTING
B/W & Color Copies
Color & B/W Prints - Booklets - Binding
Scanning - Color B.Card & Flyers
POSTERS & BANNERS
1109 Bay St., Toronto - Tel: 416-975-9674
அச்சுத் தொடர்பிற்கு JOE (416)558-8905
BAY & BLOOR (BAY SUBWAYக்கு அருகாமையில்)
OPEN 7 DAYS

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC
mhc
• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்
போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்

Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.
WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:
• STRESS • SKIN PROBLEM • RESPIRATORY PROBLEMS • DIGESTIVE PROBLEMS • VARICOSE VEINS • BACK PROBLEM /NECK PROBLEM • TENNIS ELBOW PROBLEM • TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES • SEXUAL PROBLEMS • SEXUAL PROBLEMS • CHOLESTEROL • TUMOR • FOOT PROBLEM
HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING
Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis
Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# செதுக்கப்பட வேண்டிய கல்

## ஓடும் நீர் உறைவதில்லை

வீதியில் நாம் நடந்து செல்கின்றபோது எத்தனையோ கற்கள் நமது கால்களுக்குள் மிதிபடுகின்றன. எத்தனையோ கற்களை நாம் கடந்து செல்கின்றோம். சில கற்களை மிகவும் சுவாரஸ்யமாக ரசிக்கின்றோம். ஒருசில கற்களைத் தலைதாழ்த்தி வணங்குகின்றோம். இங்கே கற்கள் கற்களாக இருப்பினும் நாம் கொடுக்கும் மரியாதை அந்தக் கற்கள் வெளிப்படுத்தும் தகவல்களில் இருந்து உருவாக்கப்படுகின்றன. இந்தத் தகவல் எவ்வாறு உருவாகின்றது என்பது தான் நாம் அடிப்படையில் உணர்ந்து கொள்ளவேண்டிய முக்கியமான விடயம்.

ஒரு கல் சமூகத்திற்குத் தரும் தகவலின் சூத்திரதாரி அந்தத் தகவலை அக்கல்லின் மூலம் வெளிப்படுத்தும் சிற்பி தான். ஒரு சாதாரண கல் ஒரு சிற்பியின் கற்பனாசக்தியால் புதிய உருவம் ஒன்றை அமைத்து அந்தச் சிற்பியின் சிந்தனை வடிவத்தை வெளிப்படுத்துகின்றது. இங்கே அடிப்படையில் ஒரு கல் கல்லாக இருப்பினும் சிற்பியின் எண்ணக்கருக்களுக்கு ஏற்ப ஒரு சிலையாக வடிவம் பெறுகின்றது. அதாவது ஒரு கல்லுக்குள் இருப்பது எண்ணில் அடங்காத சிற்பங்கள். ஆனால் ஒரு சிற்பியின் சிந்தனைக்கேற்ப அதன் உருவம் வடிவமைக்கப்படுகின்றது.

**KG Master**-kgmaster@rogers.com

இங்கே ஓர் உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு கல் சிற்பியின் சிந்தனைக்கேற்ப ஒரு சிலையாக வடிக்கப்படும்போது அந்தச் சிற்பியின் செயற்பாடு என்னவெனில் தனது கற்பனையில் உள்ள உருவத்தை அந்தக் கல்லில் கொண்டுவருவதற்காக அந்தக் கல்லில் தேவையற்ற பகுதிகளை அகற்றுவதுதான். அதாவது ஒரு கல்லின் தேவையற்ற பகுதிகளை அகற்றும் போது அக்கல்லில் இருந்து ஒரு சிலை தானாகவே உருவாகின்றது. எனவே ஒரு சிற்பி ஒரு உருவத்தை வடிப்பதற்கு அந்த உருவத்துடன் தொடர்பில்லாத தேவையற்ற பகுதிகளை எவ்வளவு திறமையாக அந்தக் கல்லில் இருந்து அகற்றுகிறாரோ அவ்வளவு திறமையான ஒரு சிலையை வடிக்கிறார்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*நன்றியுடன் KG Master*

இவ்வாறு கல்லைச் சிலையாக்கும் நுட்பம் சிற்பிகளுக்கு மட்டும் தான் உண்டு. அதிஷ்டவசமாக நாம் எல்லோரும் சிற்பிகளே. ஏனெனில் பெற்றோராகிய நாம் சிற்பிகள். நம் குழந்தைகள் தான் கற்கள். இந்தக் கற்கள் ஒவ்வொன்றும் செதுக்கப்படவேண்டிய கற்களே. ஒரு சிற்பி சிலை ஒன்றை வடிப்பதற்குப் பயன்படுத்தும் ஆயுதம் உளி. இந்த உளியைப் பயன்படுத்தும் நுட்பத்தை பொறுத்து சிலையின் வடிவம் அமைகின்றது. அதுமட்டுமன்றி இந்த உளியும் செதுக்கப்படும் கல்லும் மிகவும் கெட்டியானவை. எனவே உளிக்கும் கல்லுக் மான போராட்டம் தவிர்க்க முடியாதது. இருப்பினும் உளிவாங்கும் அடியின் வேதனையும் அந்த உளியின் தாக்கத்தைத் தாங்கும் கல்லும் இறுதியில் ஒரு சிலையாக அமையும் போது ஏற்படும் மகிழ்ச்சியால் முற்றாக மறக்கப்படுகின்றது.



இங்கே ஒரு முக்கியமான விடயத்தை நாம் கவனிக்க வேண்டும். பெற்றோராகிய நாம் சிற்பிகள். எமது மனம் தான் உளி. குழந்தைகளின் மனம்தான் கல். இந்த ஒழுங் முறையைச் சிறப்பாக நாம் உணர்ந்து கொள்வோமாயின் எமது எதிர்பார்ப்புக் ஏற்றமுறையில் தரமான சிலைகளை நாம் உருவாக்கலாம். எவ்வாறெனில் சிற்பியாகிய நாம் உளியாகிய நமது மனத்தால் கல்லாகிய குழந்தைகளின் உள்ளத்தை செதுக்குவதன் மூலம் என்றும் ஆனந்தம் தரும் சிற்பமாக அவற்றை அமைத்து விடலாம்.

எனவே ஒரு கல் சிலையாவது ஒரு சிற்பியின் கையில் இருப்பது போல் ஒரு குழந்தையின் உள்ளமும் பெற்றோரால் தான் செதுக்கப்படவேண்டும். இங்கு நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத உண்மை என்னவெனில் ஒவ்வொரு குழந்தையின் உள்ளமும் செதுக்கப்பட வேண்டியது என்பதே. இவ்வாறு செதுக்கப்படும் குழந்தைகளின் உள்ளம் செதுக்குகின்ற சிற்பியின் - பெற்றோரின் சிந்தனை முறையைப் பொறுத்து வடிவமைக்கப் படுகின்றது. இதனால் தான் சிற்பியாகிய பெற்றோரின் சிந்தனை முறைகள் நேர்மையானவையாகவும் நேர்த்தியானவை யாகவும் அமையும்போது அவர்களது உளியாகிய உள்ளம் ழுந்தைகளின் உள்ளத்தில் மாற்றத்தைக் கொண்டு வருகின்றது. அதாவது குழந்தையின் எதிர்காலம்பற்றிய எதிர்பார்ப்பு வடிவமைக்கப் படுகின்றது.

ஒரு குழந்தையைச் சிறந்த குணநலன்களுடன் நாம் உருவாக்குவதற்

அக்குழந்தையின் உள்ளத்தில் வேண்டப்படாத விடயங்களை அகற்றுவதுதான் ஒரேவழி. ஒரு கல் சிலையாக வடிக்கப்படுவதும் தேவையற்றவற்றை அகற்றுவதால் தான். இங்கே தேவையற்றவற்றை அகற்றுவதற் சிற்பியும் உளியும் அதாவது பெற்றோரும் அவர்களது மனமும் தயக்கம் காட்டக்கூடாது. சிலவேளைகளில் ழுந்தைதானே என்ற கணிப்பில் பெற்றோர்கள் அகற்றப்பட வேண்டியவற்றை அகற்ற வேண்டிய நேரத்தில் அகற்றுவதற்குத் தயங்குகிறார்கள். இது தவறு. ஏனெனில் உருவாக்கப்படும் சிலை மாறுபட்டதாக அமையும். ஒரு சிலையைச் சிற்பி உருவாக்கும் போது உளியின் தாக்கம் தவிர்க்கப்படமுடியாதது. இந்தத் தாக்கத்தின் வலி கல்லுக்கு மட்டுமல்ல உளிக்கும் தான். கல்லுக்கு வலிக்கும் என்பதற்காக உளியை உபயோகிக்காவிட்டால் கல்லு கல்லாக இருக்குமேயன்றி சிலையாவதற்கான வாய்ப்பே அற்றுப்போய்விடும்.

உளிதாங்கும் கற்கள்தான் சிலையாகும். இங்கே ஒரு விசேடமான விடயம் என்னவென்றால் குழந்தைகளின் மனம் உளிதாங்கக் கூடியவை என்பது தான். அதாவது குழந்தைகள் அனைவரும் உளிதாங்கக்கூடிய கற்கள். எனவே பெற்றோர்கள் தமது உள்ளமாகிய உளியைப் பயன்படுத்தி கல்லாகிய குழந்தைகளின் மனத்தில் தேவையற்றவற்றை அகற்றியே ஆகவேண்டும். பொறாமை, சுயநலம், கோபம், ஈயாமை, இறுமாப்பு, பொய்யுரைத்தல், களவு, மற்றோரை மதியாமை, தன்னம்பிக்கையின்மை, நேரத்தை வீணடித்தல், பெற்றோர் சொற்கேளாமை, இறை நம்பிக்கையின்மை போன்றவற்றை குழந்தைகளின் உள்ளத்தில் இருந்து அகற்றுவதன் மூலம் சிறந்தவர்களாக அவர்களை உருவாக்கமுடியும்.

குழந்தைகளிடம் காணப்படும் தேவையற்ற பழக்கவழக்கங்களை அகற்றுவதற்குப் பல்வேறு வழிகளில் உள்ளன. கலந்துரையாடுதல், அகற்றப்பட வேண்டியதன் அவசியத்தைப் புரியவைத்தல், முற்போக்குச் சிந்தனையுள்ளவர்களுடன் சேர்த்தல், தரமான புத்தகங்களை வாசிக்கப்பழக்குதல், திறமைகளைப் பாராட்டிப் பரிசளித்தல் போன்றவை சில. பெரும்பாலான சந்தர்ப்பங்களின் கண்டிப்புக்கூட ஒரு பிரதான முறையாகத் தேவைப்படும். கண்டிப்பு எனும்போது அடித்தல், உதைத்தல் என்று பொருள் கொள்ளக்கூடாது. அன்பான கண்டிப்பாகவும் அதுவும் சரிப்படாதவிடத்து சலுகைகளைக் கட்டுப்படுத்தும் கண்டிப்பாகவும் இருக்கலாம். எது எப்படி இருப்பினும் ஒரு குழந்தையின் உயர்வுக் கண்டிப்பு அவசியமாயின் பெற்றோர்கள் அதை நடைமுறைப்படுத்துவது அவசியம். ஏனெனில் கண்டிக்காத பெற்றோர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். இந்தத் தண்டிப்பு உளவியல் சார்ந்ததாகப் பல பெற்றோர்களிடம் காணப்படுகின்றது.

ஆம் பெற்றோர்களே! ஒவ்வொரு குழந்தையும் செதுக்கப்படவேண்டிய கல். சிற்பிகளாகிய நாம் உளியின் வேதனையைப் பொருட்படுத்தாது சிலையை உருவாக்கித் தான் ஆகவேண்டும். ஏனெனில் அழகான சிலை ஒன்றினால் ஆனந்தப்படுபவர்கள் எண்ணில் அடங்காதவர்கள். அது சிலைக்கும் சிறப்பு சிற்பிக்கும் சிறப்பு.

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3223 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹாராஜியின் உரைகள்**

**On DVD**

இலவச DVDக்கு அழையுங்கள்

**(416) 431-5000**
**1 877 707 3223**

**On TV**

**Saturdays at 10:30 am**
**Rogers Cable Channel - 20**
**Bell Express vu Channel - 219**



# சுயமாகச் செயற்படுங்கள் வெற்றி நிச்சயம்

எறும்புக் கூட்டம், செம்மறிக்கூட்டம் ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லும். அதாவது ஒன்றைப் பின்பற்றி மற்றொன்று செல்லும். அதற்கு தனிவழி என்று ஒன்று கிடையாது. இது கண் மூடித்தனமான வாழ்க்கை எனலாம். பிறர் தோளில் சாயாது தனித்து நிற்பதில் ஒருவித இன்பம் உண்டு. அது தனித்துவத்தையும் உண்டு பண்ணுகின்றது. இதற்கு உதாரணமாக பலரைக் கூறலாம். அவர்கள் காலம் கடந்தும் வாழ்கிறார்கள்.



வசதி உள்ள குடும்ப உறவினர், சோதிடர், அறிஞர், கடவுளர், சமூக சேவகர், தோள் கொடுத்து உதவுபவர்களாகக் கருதப்படுகிறார் கள். உறவுக்காரர்களில் ஒரு சிலரது பெயரைச் சொல்லி அவர் என்னை கைதூக்கி விட்டிருக்கலாம் என்று அங்கலாய்பவர்களும் உண்டு. சோதிடர்களிடம் தமது சுமைகளைக் கூறிபரிகாரம் தேடுபவர்களும் உண்டு. கடவுளர்களிடம் தமது கவலைகளை இறக்கிவைத்து நிவர்த்தி செய்யக் கோருபவர் களும் உண்டு. அறிவாளிகளிடம் அடைக்கலம் புகுந்து சுயம் மங்கிப் போபவர்களும் உண்டு. சமூக சேவர்களைச்சார்ந்து நின்று தமது தனித்துவத்தை இழப்பவர்களும் உண்டு. தன்னைத் தாங்கி நிற்க ஒருவர் இருந்தால் நல்லது என்றே பலரும் கருதுகின்றனர். இது ஒருவகை மன ஊனமேயாகும். உயிர்களில் மனிதக்குழந்தையை விட மற்றவையெல்லாம் பிறந்த சிலநிமிட நேரத்தில் ஓடி உலாவுகின்றன. இது இயற்கையின் வரப்பிரசாதம் எனலாம். மனிதக் குழந்தை நடைபயில ஒருவருடம் வரை செல்கின்றது. அது தாயைச் சார்ந்தே இருக்க வேண்டியுள்ளது. சார்ந்து இருக்க வேண்டியது சில வேளைகளில் அவசியம் எனினும் தனது காலில் நிற்க வேண்டிய பருவத்தில் தனித்து நிற்பது கட்டாயமுமாகும்.

வாழ்வில் புகழ்பெற்ற பெருமக்களின் வரலாறுகளை ஊன்றிக் கவனிக்கும் போது அவர்கள் சுயமாக செயற்பட்டதைக் காணலாம். தோள்கொடுக்கத் தயார் ஆனால் சாயத் தோள் தேவையில்லை என்பதே அவர்களது கொள்கையாக இருந்தது. ஏசுபிரான் உலகோரை தமது நிழலில் இளைப்பாற அழைப்பு விடுத்தது இதனாலே தான். கருணாமூர்த்தியாகி உலகை உலுக்கிய மனிதருள் ஒருவரான புத்தர் யாரையும் கேட்டு துறவு பூணவில்லை. பிள்ளை பெறாமலேயே மதர் தெராசாவாக உயர்ந்தவர் சமூக சேவையால் தன்னிகரற்றவரானார். எனவே தான் மூளையை அடகு வைத்துவிட்டு முடிவெடுக்கும் அதிகாரத்தை பிறர்வசம் விட்டவர்கள் வாழ்வில் மிகப் பெரிய நிலையை ஒருபோதும் எய்த முடியாது. இது வாழ்வியல் உண்மை.

ஓர் ஏழை இளையவன் நெடுநாள் ஆசைப்பட்டு விலையுயர்ந்த ஒரு சோடி காலணி வாங்கியிருந்தான். ஓடும் ரயிலில் அட்டைப் பெட்டியை திறந்து அவற்றின் அழகை ரசித்துக் கொண்டிருந்தான். அப்போது எதிர்பாராத விதமாக சோடிகளில் ஒன்று ஜன்னல் வழியாக வெளியே விழுந்துவிட்டது. ஒருவிநாடி அவன் முகத்தில் வருத்தம் தோன்றியது. மறுகணம் கையில் இருந்த மாற்றத்தையும் வெளியில் வீசி எறிந்தான். ஒன்றுமாத்திரம் தன்னிடமிருந்து பயனில்லை அதை எடுக்கிறவர் மற்றதையும் எடுத்து சந்தோசப்படுவார் என்றான். தன் துயரத்தை இறக்கிவைக்க தோள் தேடும் பலவீனம் அவனிடம் இருக்கவில்லை. மாறாக பிறர் துயர் தீர்க்கும் பெருந்தன்மை அவனிடம் இருந்தது.

எப்போதும் ஏதாவது ஒரு துக்கத்தை, துயரத்தை மூட்டை கட்டி வைத்துக்கொண்டு யாராது அகப்படமாட்டார்களா? அவர்கள் மேல் இறக்கி வைக்கலாம் என்ற சுய பச்சாதாப நிலையில் இருந்து வெளியேறுங்கள். பிறரால் நான் கைதூக்கி விடப்பட வேண்டியவன் என்ற எண்ணம் இருக்கவே கூடாது. பலரை உயர்த்தும் பலம் நம்முள் இருக்கின்றது என்பதை உணருங்கள்.

உடல் வலுவிழந்தவர்கள் கூட தமது கடின உழைப்பால் ஒப்பற்ற சாதனைகளை நிகழ்த்தி மற்றவர்களுக்கு உதாரணமாகத் திகழ்ந்திருக் கிறார்கள் என்னும்போது எதுவித குறையுமற்ற சாதாரண மனிதர்கள் தமது சொந்தக்காலில் உறுதியாக நின்று அரும்பெரும் செயல்களை நிகழ்த்தலாம். காமராஜர் கர்மவீராகவும் பெருந் தலைவராகவும் ஆனதும் அவரது தளராத விடாமுயற்சினாலேயாகும். தலைவர்கள் தமது அளப்பரிய செயல்களால் தமக்கு பெருமை சேர்த்ததுடன் தாம் பிறந்த மண்ணிற்கும் மகத்துவத்தை உண்டு பண்ணி இருக்கிறார்கள். காமராசர், விருது நகருக்கும், கட்டப்பொம்மன் பாஞ்சாலங்குறிச்சிக்கும், பண்டாரவன்னியன் வன்னி மண்ணிற்கும், புகழ் சேர்த்தவர்கள். இவர்கள் மண்ணின் மைந்தர்களாக



மிளிர்கிறார்கள்.

ஊன்று கோல் தேவை என்று உணராதீர்கள் ஏனெனில் சாய்வதற்கு தோள் தேடுபவர்கள் சாய்ந்தே போகிறார்கள். இமயமலை போல் கம்பீரமாக நில்லுங்கள் வெற்றி நிச்சயம்.



**நா. க. சிவராமலிங்கம்**


## இலவசம்! இலவம்! இலவசம்!
## Free Accident Claim Services
## *Motor Vehicle Accident*



- வாகன விபத்துக்கு உள்ளானீர்களா?
- உங்கள் வாகன விபத்துக் கோரிக்கையை முற்றிலும் இலவசமாக செய்து கொள்ள விரும்புகிறீர்களா (Free Accident Claim)
- வாகன விபத்தில் வலி, வருத்தம், காயம், உடல் உபாதை அல்லது மனநல பாதிப்பு ஏற்பட்டதா?
- வாகன விபத்தினுள், விபத்து உங்கள் தவறானாலும் அல்லது உங்கள் தவறாக இல்லாவிட்டாலும் பெரும் தொகை பணத்தினை நட்ட ஈடாக பெற விரும்புகிறீர்களா?
- பல வருட அனுபவம் மிக்க எங்கள் வழங்கறிஞர்களின் (Lawyers) இலவச ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்
- Licenced and Excellent Physiotherapy, Doctors, Lawyers & Assessment Services.

***Legal Defence Team Inc.***

*220 Duncan Mills Dr.*

*Suite 519, Toronto, ON (Donmills &Sheppard)*

**Call: Suresh : 416-276-0059**

[24 மணிநேர தமிழில் சேவை]

**Fax: 416-385-1804**

***Our Services:*** Scarborough, Markham, Mississauga, Richmond Hill, Aurora, New Market, Brampton, Pickering

- உங்களுக்கு உதவுவதே எங்கள் நோக்கம். பிறரிடம் சென்று ஏமாறு முன் எங்களை ஒரு முறை அழைத்து ஆலோசனை பெறுங்கள்.
- எமது அனைத்து சேவைகளும் 100% சட்ட ரீதியானவை.



## கடன் பிரச்சினையில் தவிக்கிறீர்களா?



- கடன் சுமை தாங்க முடியவில்லையா?
- உங்கள் Credit பழுதாகிவிடும் என்ற கவலையா?
- உங்கள் வீடு, வாகனம், குழந்தைகளின் கல்வி என்பன பறிபோய் விடும் என்று ஏக்கமா?
- கவலை வேண்டாம். ஒருமுறை எங்களை அழைத்து இலவச ஆலோசனை பெற்ற பின் உங்கள் முடிவை எடுங்கள்.

### இதோ உங்களுக்கு உதவ சில சட்டரீதியான வழிவகைகள்

***1. Consumer Proposal:*** உங்கள் Credit ஐயும் வீட்டையும் வாகனத்தையும் இதர சொத்துக்களையும் பாதுகாத்தபடியே உங்கள் கடனை சட்டரீதியாக 60% த்தால் குறைத்து மிகுதி 40% த்தை மட்டும் மாதாந்தம் மிகச்சிறு தொகையாக கட்ட வழிசெய்தல்.

***2. Debt Consolidation:*** உங்கள் அனைத்து கடன்களையும் ஒரு கடனாக்கி மாதாந்தம் மிகச் சிறிய வட்டியுடன் சிறு தொகையாக கட்ட வழி செய்தல். இதன் மூலம் உங்கள் Credit ஐ பாதுகாத்த படியே பெரும்பாலான வட்டிப் பணத்தை நீங்கள் சேமிக்க முடியும்.

***3. Bankruptcy:*** அனைத்துக் கடன்களிலிருந்தும் 100% சட்டரீதியாக விடுபட உதவுதல்.

***4. Line of Credit:*** ( Mini Score 680 and Min 2 years credit a must)

***5. Criminal Problems, Traffic Ticket Problems***

Call:சுரேஸ் - **416-276-0059** **24 hrs. Hotline**

**Fax: 416-385-1804**

# “பயணம் என்பது நல்ல தியானம் மாதிரி”

## நேர்காணல்: ‘வெண்ணிலா கபடி குழு இயக்குனர் சுசீந்திரன்

உற்சாகமாக இருக்கிறார் சுசீந்திரன், ‘வெண்ணிலா கபடிக் குழு’ இயக்குநர். முதல் திரைப்படமே மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுத் தந்ததில் உருவான உற்சாகம் இது. இத்தனைக்கும் பெரிய ‘ஸ்டார்’ நடிகர்கள் யாரும் இல்லை. ஆனால், ரஜினிகாந்த் உட்பட பெரிய ‘ஸ்டார்கள்’ எல்லாம் படத்தைப் பார்த்துவிட்டு நேரில் பார்த்து பாராட்டி தள்ளிவிட்டார்கள். பாராட்டு மழையில் குதூகலித்துக் கொண்டிருந்தவரை ‘விளம்பரம்’ இதழுக்காக சந்தித்தோம்.



கேள்வி: உங்களைப் பத்தி சுருக்கமான அறிமுகத்துடன் தொடங்கலாம்?

சுசீந்திரன்: தமிழ்நாட்டில் மதுரை பழனிக்குப் பக்கத்தில் அமரப்பட்டு என்கிற கிராமம்தான் என் சொந்த ஊர். பழனியில் இருந்து பதின்மூன்று கிலோமீட்டர் தூரம். ஆனால், பிறந்து வளர்ந்ததெல்லாம் பழனி நகரத்தில்தான். பன்னிரெண்டாம் வகுப்பு வரைக்கும் பழனியில் படித்தேன். என் சித்தப்பா, சென்னையில் திரைப்படத் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். பாட்டி, சித்தப்பாவுடன் சென்னையில் இருந்தார். எனவே, சிறு வயதில் இருந்தே பள்ளி விடுமுறைகளில் சென்னை வந்து செல்வேன். இப்படி சென்னையும் திரைப்படத்துறையும் பழக்கமானது. நான் அதிகமாகப் பயணம் செல்வதில் விருப்பமுள்ளவன். அதிக தூரமாகவும் எட்டாத இடங்களுக்கும் மிக சிறு வயதிலேயே அலைந்து திரிந்திருக்கிறேன். ஒரு இடத்துல இருக்கமாட்டேன். ‘கால்ல சக்கரம் கட்டிகிட்டு அலையறே’ன்னு நண்பர்கள் சொல்வாங்க. அந்தப் பயணங்கள் என் பார்வையை விசாலப்படுத்தி இருக்கிறது, பலதரப்பட்ட வாழ்க்கைகளை அனுபவங்களை எனக்கு அறிமுகப்படுத்தி இருக்கிறது. என்னுடைய பலம் என்ன என்று கேட்டால், இந்தப் பயணங்களைதான் நான் சொல்லுவேன்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கம் 20 & 21

# “பயணம் என்பது...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

படங்களும் சரியான திரைக்கதை இல்லையென்றால் தோற்கும்.

கேள்வி: ‘வெண்ணிலா கபடிக் குழு’வை இப்பொழுது பார்க்கும் போது, இந்தக் குறைகளை எல்லாம் தவிர்த்திருக்கலாம் என என்னவெல்லாம் தோன்றுகிறது?



- சந்திப்பு சிவதாணு -

சுசீந்திரன்: எல்லா இயக்குனர்களுக்கும் அவர்களின் ஒவ்வொரு படைப்பு பற்றியும் ஒரு வருத்தம் இருக்கும். 100 சதவீதம் திருப்தியாக பண்ணிட்டேன்னு யாராவது சொன்னாங்கன்னா, அவங்க பொய் சொல்றாங்கன்னு அர்த்தம். எனக்கும் குறைகள் நிறைய இருக்கிறது. திருப்தி வராத நிலையில், முழு திருப்திக்காக காத்திருந்தால் ஒருநாளும் படத்தை முடித்து வெளியிட முடியாது என்று ஒருகட்டத்தில் விலகிவிட்டேன். ஆனாலும், நீங்கள் கேட்பது மாதிரி சில குறைகளையாவது தவிர்த்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. முக்கியமான குறை இசை, ஒரு கிராமிய இசையில் இருந்து விலகின மாதிரி இருக்கு. நாட்டுப்புறப் பாடல்களில் கபடிக்கு என்று எவ்வளவோ பாடல்கள் இருக்கிறது. சின்ன ‘தீம்’ பாடலாகக்கூட அதில் ஒன்றை எடுத்துப் பயன்படுத்தியிருக்கலாம். முழுக்க முழுக்க பெருநகரங்களில் பிறந்து, வளர்ந்த ஒருவர்தான் இசையமைப்பாளர். அவரோட வாழ்க்கை முறையே வேறு. கிராமம் அவருக்குத் தெரியாது. ஜாகிர் ஹீசைன், சிவமணி போன்றவர்களின் குழுவில கஞ்சிரா வாசிக்கிறவர். உலகம் முழுக்க சுத்தியவர் என்றாலும், இந்தப் படத்துக்கான இசை என்ற தேவை வந்த போது, அவரிடம் இருந்து என்னால எவ்வளவு வாங்க முடிந்ததோ அதுதான் படத்தில் வந்திருக்கிறது.

கேள்வி: தமிழ் திரைப்படங்களின் தற்போதைய போக்கு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

சுசீந்திரன்: தமிழ் திரையுலகம் இப்பொழுது ஆரோக்கியமான ஒரு கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என்றுதான் நான் நினைக்கிறேன். எனக்குத் தெரிந்து கிட்டத்தட்ட பத்துக்கும் மேற்பட்ட படங்கள், யதார்த்தமான தமிழ் வாழ்க்கையை மையமாகக்கொண்டு எடுக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது ‘பசங்க’ வந்திருக்கிறது. தொடர்ந்து ‘ரெட்டைச் சுழி’, ‘அவள் பெயர் தமிழரசி’ போன்ற படங்கள் வர இருக்கிறது. இந்தப் போக்கு ஆரோக்கியமான சினிமாவை விரும்புபவர்களுக்கு சந்தோசமான செய்தி. இந்தப் படங்களும் வெற்றிபெற்றால், இப்படியான படங்கள் தொடர்ந்து வர ஆரம்பிக்கும். இயக்குநர்கள் அமீரும் பாலாஜி சக்திவேலும் இப்ப இந்தப் போக்கு உருவாவதுக்கான தூண்டுதல். ‘வெண்ணிலா கபடிக் குழு’வின் வெற்றி இந்தப் பாதையில் வந்து கொண்டிருப்பவர்களுக்கு நம்பிக்கையைத் தந்திருக்கிறது. மேலும் பலரை இந்தப் பாதையில் பயணம் செய்யத் தூண்டியிருக்கிறது என்கிற வகையில் எனக்கு சந்தோசம்.

கேள்வி: தமிழ் சினிமாவின் மிக முக்கியமான குறை என எதைக் குறிப்பிடுவீர்கள்?

சுசீந்திரன்: ஒரு திரைப்படத்தின் அடிப்படை அஸ்திவாரம் என்பது கதைதான். ஆனால், இந்த அடிப்படையில்தான் தமிழ் சினிமாக்காரர்கள் எல்லோரும் கோட்டை விடுகிறார்கள். தயாரிப்பாளரும் இயக்குனரும் கதை இதுதான் என்று முடிவு செய்ததுக்குப் பிறகு கதாநாயகனை முடிவு செய்தால் நன்றாக இருக்கும். நல்ல கதை உள்ள திரைப்படங்கள் வரும். ஆனால், ரொம்பக் குறைவான தயாரிப்பாளர்தான் அப்படி இருக்காங்க.

இரண்டாவது உணர்வு. நகர வாழ்க்கையை மையமாக வைத்து எடுக்கப்படும் படம் கிராமத்தவர்களுக்கும், கிராம வாழ்க்கையை மையமாக வைத்து எடுக்கப்படும் படம் நகரவாசிகளுக்கும் போய் சேரும்படி கதையின் உயிரோட்டமான உணர்வு வெளிப்பட வேண்டும். அந்த உணர்வைக் கொண்டு வந்துவிட்டால் மொழிகூட இங்கே பிரச்சினையில்லை. எனக்கு ஆங்கிலம் அவ்வளவாகத் தெரியாது. உலகப் படங்களைப் பார்க்கும் போது ‘சப்-டைட்டில்’ படித்து, என்ன பேசுகிறார்கள் என்பதையும் அதன் கதையையும் தெரிந்துகொள்ள முடியாது. ஆனாலும், சில நல்லப் படங்களைப் பார்க்கும் போது, ஏதோ ஒரு உணர்வு மட்டும் உள்ளே வரும். ‘அட நல்லா இருக்கே. நாம் படம் செய்யும்போதும் இது நடக்க வேண்டும்’ என எண்ணிக்கொண்டேன். தமிழ் மொழி தெரியாத, புரியாத ஒருவர் இந்தப் படத்தைப் பார்த்தாலும், படத்தில் நாம் சொல்ல விரும்பும் உணர்வு அவருக்குப் போய்ச்சேர வேண்டும் என்று திட்டமிட்டேன்.

என்னைப்போல் சிந்திக்கும் விருப்பமுடைய இளம் இயக்குநர்கள் நிறைய பேர் இப்பொழுது வரத் தொடங்கியிருக்கிறார்கள். எனவே, தமிழ் சினிமாவின் எதிர்காலம் நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

# வீடு வாங்குவதற்குரிய...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

என்பது எதிர்வு கூறுவது, கடினமாகவே உள்ளது. ஆனாலும் மத்திய, மாகாண அரசுகள் பொருளாதாரத்தை நிலை நிறுத்த தம்மால் ஆன சகல அக்கபூர்வமான முன்னேற்பாடுகளை செய்து வருகின்றன என்பதனைக் காணக்கூடியதாக உள்ளது.

கடந்த சில மாதங்களில் வீட்டின் விற்பனை மட்டும் அதிகரிக்கவில்லை, அத்துடன் புதிதாக விற்கப்படும் வாகனங்களின் விற்பனையும் அதிகரித்துள்ளது. உதாரணமாக மார்ச் மாதத்தில் புதிதாக விற்கப்படும் வாகனங்கள் 6.3% இனால் அதிகரித்துள்ளது. இருந்தபோதிலும் கடந்த வருட வியாபாரத்துடன் ஒப்பிடும்போது குறைந்தே காணப்படுகின்றது. General Motors பொருளாதார நெருக்கடியில் உள்ளது.

ஆனால் அமெரிக்காவில் நிதி நிறுவனங்களால், விற்கப்படும் (Power of Sale) வீடுகளின் எண்ணிக்கை (Foreclosure) ஏப்ரலிலும் அதிகரித்தே உள்ளது.
கனடிய பொருளாதார நிலை அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது ஆரோக்கியமாக காணப்பட்ட போதிலும், சிறந்தது என்று கூறமுடியாது.

எதிர்வரும் மாதங்களில் நடைபெறும் நிகழ்வுகளைக் கொண்டு வீட்டின் வியாபாரம் எந்த திசையில் செல்லும் என்பதனை அனுமானிக்க கூடியதாக இருக்கலாம். பொதுவாக ஏப்பிரல், மே, யூன் மாதங்கள் வீட்டுச்சந்தையில் சிறந்ததாகவே காணப்படும்.

கடந்த ஆறு மாதங்களில் ஏற்பட்ட வியாபாரமந்த நிலையினால், புதிதாக நிர்மாணம் செய்யும் தனி வீடுகள், அடுக்குமாடியில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை குறிப்பிட்டளவு குறைந்துள்ளது.

இதனால் இரண்டு மூன்று வருடங்களிற்கு பிற்பாடு சந்தைக்கு வர இருக்கும் குடிமனைகளின் எண்ணிக்கை குறிப்பிட்டளவு குறைவாகவே இருக்கும். ஆனால் கனடாவிற்கு புதிதாக வருபவர்களின் எண்ணிக்கையில் பெரிதான மாற்றம் இல்லை. இதனால் வாடகைக்கு பெற இருப்பவர்கள், நெருக்கடியை சந்திக்கலாம். அத்துடன் புதிதாக கட்டப்பட இருந்த பல வியாபாரக்கட்டிடத்தொகுதிகளும் விற்பனையைத் தள்ளிப்போட்டுள்ளன. இருந்தும் சில அனுபவமிக்க கட்டிட வியாபாரிகள் தொடர்ந்தும் புதிய கட்டிடத் தொகுதிகளைச் சந்தைக்கு கொண்டு வருகின்றார்கள். புதிதாகத் தொடங்கிய பல நிறுவனங்கள் Projects களை நிறுத்தி வைத்துள்ளன.

2008இல் வீட்டின் சராசரிவிலை $379,347
2009 இல் (ஏப்ரல் 2009வரை) சராசரி வீட்டு விலை $368,533

காலம் இலக்கிய நிகழ்வு
சுடர் ஏந்திய தொடர் ஓட்டம்
வாழும் தமிழ்
புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்
காலை 10:00 - மாலை 6:00




மஹாகவியின்
ஆறு காவியங்கள்
புத்தக வெளியீடு
மாலை 3:00 - மாலை 6:00
பேராசிரியர் எம். ஏ. நுஃமான்
பேராசிரியர் சி. மௌனகுரு
பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு
June 06, 2009
Scarborough Civic Centre
For more info: kalam@tamilbook.com

# 2008 - வாழ்நாள் சாதனை இயல் விருது அம்பைக்கு

மே மாதம் 24ம் திகதி ஞாயிறு மாலை தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இயல் விருது விழா வழமைபோல ரொறொன்ரோ பல்கலைக் கழகத்தின் சீலி மண்டபத்தில் நடைபெற்றது. இம்முறை வாழ்நாள் இலக்கிய சாதனைக்கான இயல் விருது எழுத்தாளர் அம்பைக்கு வழங்கப்பட்டது. கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கியத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருபவர் அம்பை. இவருடைய முதல் நாவலான அந்திமாலை இளம் வயதிலேயே வெளிவந்து கலைமகள் பரிசை பெற்றுத் தந்ததோடு இவருக்கு பெரும் புகழையும் கொடுத்தது. தற்காலத் தமிழ் இலக்கியத்தின் முதல் பெண்ணிய எழுத்தாளர் என்று இவர் அறியப்படுகிறார்.





மரபார்ந்த பெண்ணுக்கு கொடுக்கப்படும் மதிப்புகளை அம்பை மறுத்தாலும், தன் சுதந்திரத்தை தானே தேடிக்கொள்ளும் பெண்ணின் உரிமைக்காக பேசினாலும், அவர் பெண்மையை மறுத்த பெண்ணியவாதி அல்லர். அவருடைய எழுத்து தனித்துவம் வாய்ந்தது. அது வெளிப்படுத்தும் பெண்ணியம் அவருக்கு முந்திய மரபின் அடியொற்றி எழுதிய பெண் எழுத்தாளர்களிடமிருந்து வேறுபட்டது. கலையாக வெளிப்பாடு பெற்றுள்ள குரல் என்று அம்பையினுடையதைச் சொல்லலாம்.

அம்பையின் நூல்கள்: அந்தி மாலை, சிறகுகள் முறியும், வீட்டின் மூலையில் ஒரு சமையலறை, காட்டில் ஒரு மான் , வற்றும் ஏரியின் மீன்கள், ஆங்கில மொழிபெயர்ப்பில் A Purple Sea , In a Forest, a Deer ஆகியவையாகும். இவை தவிர தமிழிலக்கியத்தில் பெண்கள் என்ற Face Behind the Mask (1984) ஆங்கில ஆராய்ச்சி நூல். "பயணப்படாத பாதைகள்" என்ற ஓவியம், நாடகம், பாரம்பரிய நடனத் துறைகளில் ஈடுபட்ட பெண்களின் வாய்மொழி வரலாற்றுப் பதிவு. சுதந்திரப் போராட்டத்தில் பங்குபற்றிய பெண்கள், தலித் எழுத்தாளர்கள் ஆகியவர்களின் வாய்மொழி வரலாற்றுப் பதிவு "சொல்லாத கதைகள்" என்ற தலைப்பில் வெளியாகியிருக்கிறது.

அம்பை: SPARROW (Sound and Picture Archives for Research on Women) என்ற அமைப்பை நிறுவி அம்பை அதன் இயக்குநராக செயல்பட்டு வருகிறார்.

தன்னுடைய ஏற்புரையில் அம்பை, "என்னைப் பொறுத்தவரை வாழ்க்கையில் உள்ள "உண்மைகளை"ப் பற்றியது அல்ல இலக்கியம். உண்மை என்று நாம் உணர்வதற்கும் நமக்கும் இடையே உள்ள உறவு பற்றியது இலக்கியம். இந்த "உண்மை"யின் தன்மை மாறியபடி இருக்கிறது நம் வாழ்வில் என்பதுதான் உண்மை. வாழ்க்கையின் போக்குக்கு ஏற்ப இதை நாம் பல்வேறு கட்டங்களில் பல வகைகளில் உணருகிறோம். அதை நாம் எப்படி மொழியாக்குகிறோம் என்பதுதான் இலக்கியம். நம் உணர்வுகளின் வெளிப்படை சில சமயங்களிலும், அவற்றின் மறைப்பு சில சமயங்களிலும், உணர்வுகளை இலக்கியமாக்குகிறது. இந்த வெளிப்படை-மறைப்பு இவற்றின் கண்ணாமூச்சிதான் இலக்கியம்" என்று கூறுகிறார்.



## இயல் விருதை தொடர்ந்து வேறு விருதுகளும் வழங்கப்பட்டன:

புனைவு இலக்கியப் பிரிவில் "வார்ஸாவில் ஒரு கடவுள்" நாவலுக்காக தமிழவனுக்கும், அபுனைவு இலக்கியப் பிரிவில் "இலங்கையில் தமிழர" நூலுக்காக முனைவர் முருகர் குணசிங்கத்துக்கும், கவிதைப் பிரிவில் "உலக-ின் அழகிய முதல் பெண்" கவிதை தொகுப்புக்காக லீனா மணிமேகலைக்கும், தமிழ் தகவல் தொழில்நுட்ப சாதனைக்கான சுந்தர ராமசாமி நினைவுப் பரிசு சுரதா யாழ்வாணனுக்கும், மாணவர் புலமைப் பரிசில் அஞ்ஜெலா பிரிட்டோவுக்கும் வழங்கப்பட்டன.

இந்த விழாவுக்கு பல நாடுகளில் இருந்து எழுத்தாளர்களும், கல்வியாளர்களும், ஆர்வலர்களும் வருகை தந்து சிறப்பித்தார்கள்.


# REDEVELOPMENT PROPERTY WITH MOTEL FOR SALE



- Prime property by river in downtown Niagara Falls.
- A short walk from train and bus stations.
- Designated "Major Commercial" in the Official Plan.
- Potential for high-rise residential redevelopment.
- Eligible for local and regional government incentives under City's Community Improvement Plan.
- Currently houses 33-room motel with outdoor heated pool and attached four-bedroom house.

Inquires Tel: ***416-669-3101***

# “பிரபாகரன் நலமாக...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

அரசியல்வாதிகள் இன்று அம்பலப்பட்டு போயுள்ளனர்.

கேள்வி: இந்தியாவின் மத்தியில் புதிய அரசு அமர்ந்துள்ள நிலையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக கருதுகிறீர்களா?

## சந்திப்பு: விஜயவேலன்

பழ.நெடுமாறன்: மத்தியில் அமைந்துள்ள புதிய அரசாங்கத்தால் மாற்றங்கள் ஏற்பட்டாலும் சரி, ஏற்படாவிட்டாலும் சரி ஈழத் தமிழர்களின் போராட்டம் தொடர்ந்து நடக்கும். அதற்கு தமிழகம் பேராதரவு வழங்கும். தமிழகத்தில் தமிழ்த் தேசிய இயக்கம் தொடர்ந்து ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக முன் நிற்கும்.

கேள்வி: கி.வீரமணி, புதிதாக ‘ஈழத்தமிழர் வாழ்வுரிமை இயக்கம்’ என்ற ஒரு புதிய இயக்கத்தை ஆரம்பித்துள்ளாரே?

பழ.நெடுமாறன்: அதன் பின்னணி பற்றியெல்லாம் ஆராய நான் விரும்பவில்லை. அதற்கு தேவையுமில்லை எனக் கருதுகிறேன்.

கேள்வி: தேர்தலுக்குப் பிறகு, கடந்த மாதம் - மே 21ஆம் தேதி - நடைபெற்ற ‘இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம்’ நடத்திய எழுச்சிப் பேரணியில் அ.தி.மு.க. கலந்து கொள்ளவில்லை. இது, தேர்தல் சமயத்தில் ஈழத்தமிழர் ஆதரவு நிலைப்பாடு எடுத்த அ.தி.மு.க. தற்போது பின்வாங்கி விட்டதாக கருத இடம்தராதா?

பழ.நெடுமாறன்: இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தில் அ.தி.மு.க. கட்சி எப்போதும் ஒரு உறுப்பினராக இல்லை. இந்தப் பேரணி முழுக்க முழுக்க ‘இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம்’ சார்பில் நடத்தப்பட்ட ஒரு எழுச்சிப் பேரணி. எனவே, அவர்கள் இதில் கலந்துகொள்ளாதது ஒரு பிரச்சினை இல்லை.

கேள்வி: ‘நெடுமாறன் கும்பல் பொய்ச் செய்திகளைப் பரப்புகிறது’ என்று தி.மு.க.வின் அதிகாரபூர்வ நாளிதழான ‘முரசொலி’ எழுதியுள்ளதே?

பழ.நெடுமாறன்: அப்படியா... அது என் கவனத்திற்கு வரவில்லை. நீங்கள் சொல்லித்தான் இப்பொழுது அதை நான் தெரிந்து கொள்கிறேன். ‘முரசொலி’ சொல்வதற்கெல்லாம் பதில் கூறத் தேவை யில்லை என நான் கருதுகிறேன்.

கேள்வி: இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகரும் இந்திய வெளியுறவுச் செயலரும் கொழும்புவுக்கு அடிக்கடி செல்கின்றனர். தமிழக முதல்வர் கருணாநிதியை வந்து சந்திக்கின்றனர். ஆனால், என்ன பேசினோம், என்ன உடன்பாடு ஏற்பட்டது என்பதை இருதரப்பினரும் மக்களுக்கு தெரிவிப்பதில்லை. இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பழ.நெடுமாறன்: இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் கொழும்பு செல்வதற்கு முன்னால், தமிழக முதல்வர் கருணாநிதியை பார்த்துவிட்டு சென்றிருக்கவேண்டும். ஆனால், அவர் கொழும்பு சென்று அங்குள்ளவர்களுடன் பேசிவிட்டுத் திரும்பும் போதுதான் தமிழக முதல்வரைச் சந்திக்கிறார். தமிழக முதல்வரும் இன்முகத்தைடன் அவரை வரவேற்கிறார். இந்த ஒன்றே போதும். இவர்கள் எல்லோரும் ஆறு கோடி தமிழர்களை சுயமரியாதையுள்ள மனிதர்களாக மதிக்கவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது.

கேள்வி: கடைசிக் கேள்வி... விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தில் இறந்துவிட்டதாக அந்நாட்டின் ராணுவம் அறி வித்துள்ளது. முதலில் இதை மறுத்த விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளர் பத்மநாதன், இப்பொழுது ராணுவத்தின் செய்தி உண்மைதான் என அறிவித்துள்ளார். உண்மையில் என்ன நடந்துள்ளது? உங்கள்



நிலைப்பாடு என்ன?

பழ. நெடுமாறன்: என்னைப் பொறுத்தவரைக்கும் உலகத் தமிழ் மக்களின் தேசியத் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரன் நலமாக உள்ளார். அவருக்கு எந்த ஆபத்தும் இல்லை. மிக விரைவில், மீண்டும் பிரபாகரன் மறைவிடத்தில் இருந்து வெளியே வந்து, விடுதலைப் போரைத் தொடர்ந்து நடத்துவார். வல்லரசுகளின் சதிச் செயல்கள் முறியடிக்கப்பட்டு, ‘தமிழீழம்’ மலர்ந்தே தீரும். அந்த நாள் தொலைவில் இல்லை.


Arajen Beauty Centre



- Make Up
- Hair Style & Hair Care
  - Dying & Highlighting
- Bridal Make Up & Arangetram
- Skin Care (All Kind of Facial)
  - Threading & Waxing
- Skin Treatment
- Nail Art
- Dress Making (Saree & Blouse)
- Permanent Hair Removal
- Pedicure, Manicure
- Mehindi
- Bouquet, Sadainagam
- Cryotherapy
- Micro Dermabrasion



Beauty Classes

அழகியல் கலையை கற்க விரும்புகிறீர்களா? எங்களது கலை வகுப்புகளில் இணைந்து கொள்ளுங்கள்

Certificate Courses & Seminars

அரஜன் அழகு நிலையம்

2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2

(இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)

இப்போது ஆண்களுக்கான சேவைகளும்

Tel: 416.509.7978

Web: www.arajenbeauty.ca, E-mail: sasi@arajenbeauty.ca

# பேரண்டக் கதை - கலிலியோ

பேரண்டக்கதையின் மூன்றாம் பகுதியிற்கு வருவோம். முதற்பகுதியில் பேரண்டமானது பூமியை மையமாகக் கொண்ட, நிலையான, ஒரு ஒழுங்கான அமைப்பின் கீழ் இயங்கிக் கொண்டு இருக்கும் ஒன்றெனக் கருதப்பட்டுக் கொண்டிருந்தது. அதற்கு ஒரு உறுதியான விளக்கத்தினை அரிஸ்ரோற்றில் கொடுத்திருக்க, தொலமி, அதற்கான மாதிரி வடிவம் ஒன்றினை சமைத்திருந்தார். கடவுட் கொள்கையில் அவ்வளவாக நம்பிக்கையில்லாத அரிஸ்ரோற்றிலின் பேரண்ட வடிவினை, அப்பேரண்டப் பொறியினை, ஒழுங்காக இயக்கிக் கொண்டு இருப்பவர் கடவுள் என மதத்தலைவர்கள் கூறி, அந்தப் பேரண்ட மாதிரியை ஏற்றுக்கொண்டனர். அதன் அடிப்படையிலேயே விஞ்ஞான விளக்கங்களையும், விஞ்ஞானத்துடனான மதவிளக்கங்களையும் கூறிக்கொண்டார்கள் மதத்தலைவர்கள், போதகர்கள்.

இரண்டாவது பகுதியின் காலத்தில், பூமியானது பேரண்டத்தின் மையத்தில் இருக்க முடியாது. மேலும் குறிப்பிட்ட ஒரு பொறிமுறையின் கீழ்த்தான் பேரண்டம் இயங்கிக் கொண்டு இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்பது கருத்தாக எழுந்திருந்தது. கெப்பினர், கொப்பநிக்கஸ், கலிலியோ ஆகியோர் வான்வெளியினை, சரியானபடி இனங்காண்பதற்கு முயற்சிகள் செய்தார்கள். இந்தவகையில் பிராகியில் பங்களிப்புக்கூடப் பெருமளவில் இருந்தது. இவர்களது முயற்சிகள் மதங்களின் நம்பிக்கைகளுக்கு முரணானவையாகவும், மதங்களின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டைகளாகவும் இருந்ததினால், மதங்களின் செல்வாக்கினால் கலிலியோ கெப்பினர் போன்றவர்களின் முயற்சிகள் ஏதோ ஒருவகையில் தடைசெய்யப்பட்டன.

மூன்றாவது பகுதியான இப்பகுதியின் காலத்தில், பேரண்டம் பற்றிய பல தெளிவான விளக்கங்கள் பெறப்பட்டன. புதுப்புது விஞ்ஞான கருவிகளினால் வான்வெளி (பேரண்டம்) பார்க்கப்பட்டது. புதுப்புது விதிகள் கொண்டு அது அலசி ஆராயப்பட்டது. அத்துடன் மதங்களின் இடைஞ்சல்களும் ஓரளவுக்கு அகற்றப்பட்டு இருந்தது. எனவே பலரது கூட்டு முயற்சியால் பேரண்ட அறிவானது வளரத்தொடங்கியது. பேரண்டம் பற்றிய வியாக்கியானங்கள் மிக வேகமாகவும் ஒன்றன் மேல் ஒன்றாகவும், மிக ஆரோக்கியமாகவும் வரத்தொடங்கியதால் இப்பகுதியின் நாயகர்கள் என யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. ஆயினும்



**பிரபஞ்சம் - 41**

இந்த மாற்றங்கள் எல்லாவற்றிற்கும் காரண-மானவர் என்ற முறையில், ஆரம்பித்து வைத்தவர் என்ற முறையில் ஒரே ஒருவரை மட்டும் இப்பகுதியின் நாயகனாகக் குறிப்பிடுகிறேன். சேர் ஐசாக் நியூட்டன் என்ற அந்த மாபெரும் விஞ்ஞானியின் சில விடயங்களை முதலில் இப்பகுதியில் பார்ப்போம்.

**சேர் ஐசாக் நியூட்டன்.**

நியூட்டனைப் பற்றி, அவரது பெயரை அறியாதவர்கள் இல்லை என்றே சொல்லலாம். அவ்வளவுக்கு விஞ்ஞானத்தில் பெயர் பெற்றவர், நியூட்டன். விஞ்ஞானத்தில் மட்டுமல்ல, ஆன்மீகத்திலும் கூட அதிக ஈடுபாடு கொண்டவராக இருந்தவர்தான் நியூட்டன். ஆன்மீகத்தில் தான் விஞ்ஞானத்தைவிட அதிக கட்டுரைகள், எழுதியிருந்தார் என்பர். அவரை நன்கு தெரிந்தவர்கள் தனது இறுதி நாட்களில் விவிலியத்தின் கடைசிப் புத்தகத்தில் வெளிப்படுத்திய சுவிசேசம் பற்றி அதிக அக்கறையுடன் ஆய்வுகள் செய்திருந்தார்.

பொதுவாகவே விஞ்ஞானத்தின் எல்லாப் பகுதிகளிலுமே ஆய்வுகள் செய்து பல கண்டுபிடிப்புகளையும், உய்த்தறிதல்களையும் உலகிற்குத் தந்த நியூட்டன் பற்றி முற்றாகவே நாம் பார்க்கப்போவதில்லை. பேரண்டம் பற்றிய அவரது பங்களிப்பினை மட்டுமே பார்க்கப்போகின்றோம். கணிதத் துறையின் நுண்கணிதத்தினை (Calculas) கண்டு பிடித்து உலகிற்குத் தந்த நியூட்டனின் கண்டுபிடிப்புகளில் பேரண்டம் பற்றிய கண்டுபிடிப்புகள், எதிர்வு கூறல்கள் கொஞ்சம்தான். ஆயினும் பேரண்டத்தினைப் பொறுத்தவரையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியவை அவைதான். அத்துடன் நியூட்டனின் பெயரைப் பாமர மக்களிடமும் கூட பிரபல்யப்படுத்தியவையும் அவையே.

கொப்பநிக்கஸ் பயந்து, பயந்து ஆரம்பித்து வைத்த கதிரவ மையக்கொள்கையானது (பிராகி), கெப்பினர், கலிலியோவின் ஊடாக வந்து நியூட்டனினால் முடித்து வைக்கப்பட்டது. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், பேரண்டம் பற்றிய நியூட்டனின் பார்வையானது, ஒரு தற்செயல் நிகழ்ச்சி என்றே தான் கூற வேண்டும்.

ஹேலியைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். தூமகேதுக்கள் (வால்வெள்ளிகள்) பற்றித் துலக்கமான விளக்கம் தந்தவர். இவரது பெயரினால் ஒரு வால்வெள்ளி கூட 'ஹேலியின் வால்வெள்ளி' என அழைக்கப்படுகின்றது. இவர் ஒரு தடவை கணிதத்தில் வல்லவரான நியூட்டனிடம் வந்து கதிரவனை வலம் வருகின்ற அல்லது வலம் வரக்கூடிய விண்பொருட்களின் இயல்புகளுக்கான விளக்கத்தை கோள்களின் இயக்கங்கங்களுக்கான கெப்பினரின் விதிகளின் அடிப்படையில் கேட்டார். அக்காலத்தில் தான் நியூட்டன் ஈர்ப்பு விதியினைக் கண்டுபிடித்திருந்த காலம். அத்துடன் பொருட்களின் இயக்கங்களுக்கான மூன்று இயக்கவிதிகளையும் நியூட்டன் கூறியிருந்த காலம். இவை இரண்டையும் வான்பொருட்களின் இயக்கங்களுக்குப் பயன்படுத்தி, கெப்பினரின் விதிகள் மிகச் சரியானவை என்பதனைக் கணித நிறுவல்களுடன் நிறுவிக் காட்டினார் நியூட்டன். அத்துடன் வான்பொருட்களின் இயக்கங்களுக்கு கெப்பினரின் விதி பொதுவாகவே பொருந்தும் எனக்காட்டி, கெப்பினரின் விதிகளைப் பொதுமைப்படுத்தினார். இதுவே வான்வியலுக்கான நியூட்டனின் பெரும் பங்களிப்பாகும். அன்றில் இருந்து வானவியல் அபரிதமிதமாக வளர, பேரண்டமும் புதுப்புது வடிவங்களைப் பெறதொடங்கியது.

இன்னமும் வரும்.



**- கனி -**


**Driving School**



- ஓட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை
- நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி
- G1, G2 தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள்,
- வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்
- நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி - General Driving School

Ministry of Transportation Approved Instructor - பேரின்பநாதன் வேந்தன் - 416-731-2829
Email: venthanctr@yahoo.com

YARL WINDOW BLINDS & DRAPERY
Since 1991
Tel.: 416-806-5397
905-201-7733
We have experience to make your home more beautiful ...
VENETIAN/VERTICAL
ROLLER/WOOD/FORMWOOD BLINDS
WOOD & VINYL SHUTTERS
We are specialized in Custom Made Drapery & Blinds




Call : N.SELVAM

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
நியாயமான கட்டணம். தரமான சேவை.
வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880



SMILE....
- BUSINESS PLANS
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS
PL. CALL: 905.887.7457 / 905.751.7537
24 hrs, 365 days


Niru BRAND®
FOOD PRODUCTS
நிரு பிரான்ட்
வறுத்த மிளகாய்த்தூள்
ROASTED
CURRY (CHILLI) POWDER
POUDRE DE CURRY (ROTIES)
Pure Gingelly Oil
(Sesame Oil)
Huile De Sesame Extrite
De Graines De Toute
Premiere Qualite
Kitul Treacle
CHILLI SAUCE
COW GHEE
SPICY COFFEE
JACK
Tel: 416-750-1976 Web:www.niru.com e-mail: info@niru.com

# உடல் பருமனைக் குறைத்திட இயற்கை முறைகள்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

உடல் பருமனை உணவுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமே குறைக்க முடியும். இதனுடன் சில தோர்தெடுத்த ஒரு சில யோகாசனப் பயிற்சியின் மூலம் வாழ்நாள் முழுவதும் கட்டுடலுடனும் அழகுடனும் காட்சியளிக்க முடியும். இதற்குத்தான் ‘ஆகாரம் பாதி - ஆசனம் பாதி’ என்பர். குறைந்த வெப்பசக்தி, கலோரி கொண்ட உணவுகளைத் தேர்ந்தெடுத்தல் மூலம் உடல் பருமனிலிருந்து விடுபடலாம். நவீன மருத்துவத்தில் உடல் எடையைக் குறைக்க மூன்று வழிகளில் மருந்தைத் தேர்ந்தெடுக்கின்றனர்.



திரிகோணாசனம்



தனுராசனம்



சர்வாங்காசனம்



மகாமுத்ரா



அர்த்த மச்சேந்திராசனம்

1. பசியைக் குறைக்கும் மருந்துகள்
2. நீரைப் பிரிக்கும் மருந்துகள்
3. ஹார்மோன் மருந்துகள்

பசியைக் குறைக்கும் மருந்துகளை உடல் எடையைக் குறைக்கப் பயன்படுத்தினால் உடல் பலயீனப்படுகிறது. கல்லீரல் பாதிக்கப்பட்டு பித்த நோய்கள் உண்டாகின்றது.

நீரைப்பிரிக்கும் மருந்துகளை உட்கொண்டால் உடல் எடையானது குறைந்தது போல தோற்றமளிக்கும். மீண்டும் உடல் பழைய நிலைக்குத் திரும்பவிடும். ஏனெனில் நமது உடலானது 70% நீரின் தன்மையுடையது. ஹார்மோன் மருந்துகளைத் தொடர்ந்து உபயோகித்து வந்தால் பலவித பின்விளைவுகள் (Side Affects) உண்டாகின்றது. ஹோர்மோன் மருந்துகளின் தொடர் உபயோகத்தினால் புற்றுநோய்கள் (Cancer) உண்டாகவும் வாய்ப்புண்டு.

முறையற்ற உணவுப் பழக்கத்தினால் உண்டாகும் அதிக உடல் எடையை முறைப்படுத்தப்பட்ட உணவுகளைக் கொண்டே எளிதில் குறைக்க முடியும்.

**உடல் எடையைக் குறைக்க மாதிரி உணவுப்பட்டியல்.**

**காலை உணவு**

1. சிறிதளவு - சீரியல் - ஓட்ஸ் - மரக்கறி சூப் அல்லது
2. 4, 5 இடியப்பம் - இட்லி கொத்தமல்லி சட்னியுடன் அல்லது
3. இரண்டு பாண் துண்டுகள் ஏதேனும் ஒரு சலட்டுடன்

**மதிய உணவு**

1. ஒரு அளவான சாதம் சமைத்த காய்கறி, கீரைகள் அல்லது
2. காய்கறி சலட்டுடன் - ரொட்டி Pizza or Pasta

**இரவு உணவு**

இரவு உணவை 7:00 மணிக்குள் முடித்துவிட வேண்டும்.

1. சாதம் அல்லது வேறு எந்த மாப்பொருளுள்ள உணவுவகைகளுடன் அரையளவு வேகவைத்த காய்கறிகள் வேண்டுமானால் சிறிதளவு மாமிசத்தையும் சேர்த்து கொள்ளலாம்.
2. முளைகட்டிய பயறு, பழவகைகள் என்பவற்றுடன் சிறிதளவு இஞ்சியும் சேர்ப்பது நன்று.

**யோகாசனப் பயிற்சி**

உடல் எடையைக் குறைப்பதில் யோகாசனம் முக்கிய இடம் வகிக்கிறது. ஒரு சில தேவையான ஆசனங்களைத் தினமும் 15 நிமிடங்கள் பழகி வந்தாலே மாதம் குறைந்தது 5 பவுன்ஸ் எடையைக் குறைக்கமுடியும். காலையில் அல்லது மாலையில் இதனைச் செய்யலாம்.

1. சர்வாங்காசனம் 2. தனுராசனம்
3. திரிகோணாசனம் 4. பஸ்ஸிமொத்தாசனம்
5. அர்த்த மச்சேந்திராசனம் 6. மகாமுத்ரா

இவற்றை ஆரம்பத்தில் ஒரு யோகாசன ஆசிரியரின் உதவியுடன் பழக வேண்டும்.

**அழகே வா! அருகே வா!**

அழகு என்பது அனைராலும் விரும்பப்படும் ஒன்று. அழகைப் பேணுவது சிறந்தகலை. ஒரு காலத்தில் அழகு நிலையங்களுக்குச் செல்வது ஆடம்பரத்தின் தன்மையாகக் காணப்பட்டது. ஆனால் இன்று அத்தியாவசியமாகிவிட்டது. அலுவலகப் பெண்கள் முதல் பூ விற்கும் பெண்கள் வரை அழகு நிலையங்களை நாடிச் செல்கின்றனர். இவர்கள் மட்டுமா? ஆண்களும் தான். நமது உடலில் அழகு இரண்டு வழிகளில் வெளிப்படுகிறது.

1. நமது உணவு, உடற்பயிற்சி, நற்சிந்தனை இவைகளால் ஏற்படும் உள்ளம் சார்ந்த அழகு.



பஸ்ஸிமொத்தாசனம்

2. பிறப்பால் ஏற்படும் அழகு. அதனை முறைப்படுத்துவால் கிடைக்கும் தனி அழகு.

இவ்வாறு அழகைப் பேண விரும்பும் மனிதர்கள் உடல் பருமனாகுவதால் அது எதிர்மறையான பலனையோ கொடுக்கும். உடல் எடை கூடும் போது மூட்டுவலிகள் அதிகரிக்கும், தொந்தி பருக்கும். இதனால் அதிக கொழுப்புகள் உடலின் உட்பகுதியில் சேர்வதால் சிறுநீரகங்கள், கல்லீரல், இருதயம் என்பன பாதிக்கப்படுவதால் அதனோடு சேர்ந்த பல நோய்கள் உருவாகின்றன.

எனவே இந்த விடயத்தில் முன்கூட்டியே அதிக கவனமெடுத்து பொருத்தமான உணவுத் திட்டங்களை கடைப்பிடிப்பதுடன் ஒரு சில யோகாசனப் பயிற்சிகளையும் செய்து வந்தால் நீண்ட ஆயுளுடன் இனிது வாழலாம்.





ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm


APARTMENTS FOR RENT



In a NEWLY Renovated High-Rise Apartment Building
Clean, Utilities inclu. Free parking. Close to TTC, Tamil store in building, schools nearby

Pl. Call: 416.264.2818

YOGA - MEDITATION CLASSLESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



தொடர்புகுகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**
***Etobicoke, Woodbridge, Brampton - Harani - 416.270.1687***

# புற்றுநோய்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

மைக்குரோவேவில் பாவித்து உணவைச் சூடாக்கக் கூடாது. முக்கியமாக கொழுப்புள்ள பொருட்கள், உயர்வெப்பத்தில் பிளாஸ்ரிக்குடன் சேர்ந்து டயோக்சின் (Dioxin) என்ற நச்சுப் பொருளை உணவுக்குள் வெளிவிடுகின்றன. இது எமது உடலுக்குக்கேடு விளைவிக்கும். Pyrex அல்லது கண்ணாடிப் பாத்திரங்களில் வைத்து உணவை சூடாக்கவும். பைக்கட்டுகளில் அடைக்கப்பட்டுள்ள திடீர் உணவுகளை வெளியே எடுத்து மேற்கூறிய பாத்திரங்களில் வைத்துச் சூடாக்கவும். மேலும் போம் (Foam) கொள்கலங்களையும் மைக்கோரேவில் வைக்கக்கூடாது. இதுவும்



டயோக்சினை உண்டாக்கும். மேலும் உணவுகளைச் சூடாக்கும் போது பிளாஸ்ரிக் தாள்களால் (சரன் - Saran wrap) மூடக் கூடாது. சாதாரண கடதாசியைப் பாவிக்கலாம்.

டயோக்சின், புற்றுநோயை ஏற்படுத்தும். (குறிப்பாக முலைப்புற்று நோய்)

இது எமது உடலிலுள்ள கலங்களுக்கு அதிக நச்சுத்தன்மையை ஏற்படுத்தும். எனவே நாம் இதுபற்றிக் கவனமாக இருத்தல் வேண்டும்.

1. மைக்குரோவேவில் பிளாஸ்ரிக் கொள்கலன்கள் வைக்கக்கூடாது.

2. நீருள்ள போத்தல்களை (பிளாஸ்ரிக்) அதிகுளிர்பெட்டியில் (Freezer) வைக்கக்கூடாது.

3. மைக்குரோவேவில் பிளாஸ்ரிக் மூடுதாள்கள் (wrap) வைக்கக்கூடாது.



நவீன கண்டுபிடிப்புக்களால் நன்மைகளும் உண்டு. தீமைகளும் உண்டு. எனவே தீமைகளை அறிந்து அவற்றைத் தவிர்த்து ஆரோக்கியமாக வாழ்வோமாக.


## ▶ K. G. S. MOVING ◀

**MOVING & DELIVERY**

- House ☛ Toronto
- Appartment ☛ Kitchener
- Office ☛ Ottawa
- Basement ☛ Montreal

Call: Sasi -☎: **416.844.7274**



## வயோதிபருக்கான வாகன சேவை

- பிள்ளைகள் வேலையில் லீவு எடுப்பது கஷ்டமா?
- லீவு எடுத்தால் வேலை போய்விடும் என்ற பயமா?

கவலை வேண்டாம் என்னை அழையுங்கள்



குடும்ப வைத்தியர், உடல் பரிசோதனை நிலையம், விசேட வைத்தியர் (Specialist), வைத்தியசாலை மற்றும் அரச காரியாலயங்கள் உட்பட வைத்தியர் பிறமொழியாயின் மொயிபெயர்ப்பும் செய்து மருந்து மாத்திரைகளையும் வாங்கி கொடுத்து தங்களின் தங்குமிடங்களில் பாதுகாப்பாக கொண்டுசென்று விடுவேன். முன்கூட்டியே நாள், நேரம் என்பதை அறியத்தரவும்.

தொடர்புகளுக்கு: **மாறன்** - **647.205.8502**



## யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

**தொடர்புகளுக்கு: 416.299.8361**

# JUNE 6, 2009

# 5 STARS CAFE

SRI LANKAN SPICY COFFEE & TEA

BREAKFAST

HOT LUNCHES

KOTHU ROTTI



SNACKS

BURGERS/HOT DOGS

FRESHLY SQUEEZED FRUIT JUICES

GTA SQUARE
2ND FLOOR
(MIDDLEFIELD / FINCH)
416-321-2004

# நீயன்றி வாழ்வேது வேலன் திருவுருவே?

பல்லவி

உழறவைத்தாய் ஐயா ஒருகணம் நீ
உன்னையேநீ மறைத்து

அனுபல்லவி

வேலனின் திருவுருவே வண்தமிழன் அன்புருவே
விளையாட்டு போதுமையா

சரணம்

ஒருநாள் இல்லையென்றால் உண்டாகும் துய ரறிந்தோம்
தெருநாய்கூட எம்மைத் தீண்டிடும் நிலை உணர்ந்தோம்
வருவாய் வடிவழகா வாழ்வேது நீ யன்றி
தருவாய் தமிழீழம் தந்தெமை ஆண்டருள்வாய்!

செந்தமிழ் இதயமெல்லாம் செழித்திடும் அன்புருவே
முந்திடும் துயர்களையும் முருகனே எம்பிரபு
சிங்கள சங்காரம் செய்துநீ எம்மண்ணில்
மங்கல வாழ்வருள்வாய் மாண்புடைத் தமிழ்க்குமரா

ஆண்டாண்டு காலங்கள் மாண்டது கோடிஐயா
அழுதுநாம் புலம்பியே இடிந்ததும் போதுமையா
அடிமை விலங்கொடித்து அநீதி அறவொழித்து
விடியல் காட்டிடவே விரைந்திடு குமராநீ!

- ஆக்கம் அருட்கவி ஞானகணேசன்

# I.P.L. காய்ச்சல்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

சாம்பியனஸ் லீக் 'டுவென்டி - 20' போட்டிகள் உதவும். முதல் கட்ட சாம்பியன்ஸ் லீக் தொடரை எதிர்பாராத காரணங்களால் நடத்த முடியவில்லை.

ஆனால் இம்முறை இந்தியாவில் தொடரை வெற்றிகரமாக நடத்துவதில் உறுதியாக இருக்கிறோம். இவ்வாறு லலித் மோடி தெரிவித்தார்.

**3வது ஒருநாள் - 58 ஓட்ட வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி**

வெஸ்ட்இண்டீஸ் அணிக்கு எதிரான 3வது ஒருநாள் போட்டியை இங்கிலாந்து அணி 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றுள்ளது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரை 2 - 0 என்ற போட்டிகணக்கில் இங்கிலாந்து கைப்பற்றியுள்ளது. பிர்மிங்காம் நகரில் நேற்று நடந்த இப்போட்டியில் பூவா - தலையா வென்ற வெஸ்ட்இண்டீஸ், முதலில் இங்கிலாந்தை பேட் செய்யக்கேட்டுக் கொண்டது. துவக்க வீரர்களாக ஆண்ட்ரு ஸ்டராஸ், போபாரா களமிறங்கினர். இருவருமே சிறப்பாக விளையாடியதால், அணியின் ஓட்ட எண்ணிக்கை விரைவாக உயர்ந்தது. இதில் போபாரா 49 ஓட்டங்கள் எடுத்திருந்த போது பிராவோ பந்தில் போல்ட் ஆனார். முதல் விக்கெட்க்கு களமிறங்கிய எம்.ஜே.ப்ரியார், ஸ்டிராஸ் உடன் இணைந்து பொறுப்பாக விளையாடினார்.

அரைசதம் பூர்த்தி செய்த ஸ்டிராஸ், பென்பந்தில் கீப்பர் ராம்தினிடம் கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார். இதையடுத்து ஓவாயிஸ் ஷா, ப்ரியாருடன் இணைந்தார். இந்த ஜோடி அதிரடியாக விளையாடியது. இதில் ப்ரியார் 87 ஓட்டமும், ஷா 75 ஓட்டமும் எடுத்து ஆட்டமிழந்தனர். அடுத்தடுத்து களமிறங்கிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும், துவக்க வீரர்களின் சிறப்பான பங்களிப்பால், இங்கிலாந்து அணி நிர்ணயித்த 50 ஓவர்களில் 7விக்கெட் இழப்புக்கு 328 ஓட்டங்கள் குவித்தது. வெஸ்ட்இண்டீஸ் பந்து வீச்சாளர்களில் ஜெரோமி டெய்லர் 3 விக்கெட்டுகளும், பொல்லார்ட் 2விக்கெட்டுகளும், பிராவோ பென் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர். வெற்றி பெற 329 ஓட்டங்கள் தேவை என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணி ஆரம்பத்திலேயே தடுமாறியது. துவக்க வீரர்கள் கிறிஸ் கெய்ல் 11ஓட்டங்கள், மோர்டன் 21 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.

முதல் விக்கெட்டுக்கு களமிறங்கிய ராம் நரேஷ் சர்வான் 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததால், அந்த அணி 66 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. சந்தர்பால் ஒரு முனையில் பொறுப்பாக விளையாடினாலும், மறுமுனையில் விக்கெட்டுகள் அடுத்தடுத்து சரிந்ததால், வெஸ்ட்இண்டீஸ் அணி 49.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 270 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. சந்தர்பால் அதிகபட்சமாக 68 ஓட்டங்கள், பிராவோ 26, ராம்தின் 45, பொல்லார்டு 12, ஜெரோமி ரெய்லர் 18, சுலீமான் பென் 31, ராம்பால் 16 ஓட்டங்கள் எடுத்தனர்.

இங்கிலாந்து தரப்பில் ஜேம்ஸ் ஆண்டர்ஸன் 3விக்கெட்டுகளும், பிராட் 2 விக்கெட்டுகளும், பிரெஸ்னன், ஸ்வான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர். இங்கிலாந்து அணிக்கு சிறப்பான துவக்கத்தை அளித்த மேட்ப்ரியார் ஆட்டநாயகனாகவும் பந்துவீச்சாளர் பிராட் தொடர் நாயகனாகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

# இசைப்பேரனுபவம்...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்து, குடமுழுக்கும் செய்து நிவந்தங்கள் அளித்தான். கி.பி. 825-850 தெள்ளாறெறிந்த நந்திவர்ம பல்லவன் காலத்திற்கு முந்திய திருப்பணி, ஆதி கோயில் அமைப்பை மாற்றியுள்ளது. அன்றிலிருந்து தொடங்கி, பல்வேறு மன்னர்களாலும் மாற்றி மெருகேற்றி அமைக்கப்பட்டு இன்றைய நிலையை அடைந்திருக்கிறது இந்தக் கோயில்.

நள்ளிரவு பன்னிரண்டு மணி வரைக்கும் இடைவிடாமல் தொடர்ந்து இசை நிகழ்ச்சிகள் நடக்கும். நாதஸ்வரக் கச்சேரிகள், வீணை, புல்லாங்குழல், வயலின் போன்ற கருவியிசை நிகழ்ச்சிகள், பல்வேறு வகையான பாடல்கள் என ஒலிபெருக்கிகள் மூலம் அப்பகுதியெங்கும் இடைவிடாது இசை ஒலித்துக்கொண்டிருக்கும். எங்கே போனாலும் இசைதான். அருணா சாய்ராம், சஞ்சய் சுப்பிரமணியம், மாண்டலின் ஸ்ரீனிவாஸ், புல்லாங்குழல்



இக்கோயிலில் வருடம்தோறும் சித்திரை மாதம் ஏழூர் வலம் எனும் விழா வெகு சிறப்பாக நடைபெறும். அப்போது சிவபெருமான் கண்ணாடி பல்லக்குகளில் ஏறி திருவையாற்றில் ஆரம்பித்து திருப்பழனம், திருவேதிக்குடி, திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி மற்றும் திருநெய்த்தானம் ஆகிய ஆலயங்களுக்கு சென்று திரும்புவார். இந்த விழாவிற்கு, பல ஊர்களிலிருந்தும் பக்தர்கள் வருவார்கள். அவர்கள் கொளுத்தும் வெயிலிலும் ஐந்தெழுத்தை உச்சரித்து திருமுறைகளை பாடிக்கொண்டு பரவசத்துடன் பரமனை தொடர்ந்து செல்வார்கள். பக்தர்களுக்கு வழிநெடுகிலும் உணவும் நீரும் மோரும் தாராளமாய் கிடைக்கும். ஆடி அமாவாசை அன்று நடைபெறும் அப்பர் கயிலாயக் காட்சித் திருவிழாவும் வெகு சிறப்பாக நடைபெறும். மேலும் ஒரு சிறப்பு ஆண்டுதோறும் நடைபெறும் தியாகராய ஆராதனை சங்கீத திருவிழா.

திருவையாறு என்றாலே தியாகப்ருமத்தின் இசையும் தமிழிசையும் எல்லோருக்கும் நினைவுக்கு வரும். அந்தளவுக்கு வருடம்தோறும் இங்குள்ள தியாகராஜ சுவாமிகள் கோயிலில் நடைபெறும் இசைவிழா பிரசித்திப்பெற்றது. பெருக்கெடுத்தோடும் காவேரியின் கரையில் தியாகராஜ சுவாமிகளின் சிறிய கோயில் அமைந்துள்ளது. இது, தியாகராஜரின் சமாதியாக இருந்தது, பிற்பாடு ஒரு கோயிலாக எடுத்துக் கட்டப்பட்டது. இங்கு மற்ற எல்லாக் கோயில்களையும் போலவே, முறையான பூஜைகளும் பிற சடங்குகளும் நடக்கின்றன.

மற்ற நாட்களில் ஆள் நடமாட்டம் குறைந்து, வெற்றிடமாகக் காட்சியளிக்கும் இந்த கோயில் இசைத் திருவிழா நாட்களில் திடீர் கடைகள், திடீர் காபி விற்பனைச் சாலைகள், திடீர் குறுந்தகடு விற்பனை மையங்கள் என நிறைந்து கொண்டாட்டமும் குதூகலமுமாக களைகட்டும். ஆலயத்துக்கு முன் ஐந்தாயிரம் பேர் இருக்கத்தக்கதாக ஒரு பெரிய கொட்டகை அமைக்கப்படும். நூறு வருடங்களுக்கும் மேலாக, தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர் கருப்பையா மூப்பனாரின் குடும்பம்தான் இந்தக் கொட்டகையை அமைத்து வருவதாகச் சொல்கிறார்கள். கொட்டகைக்குள் மணல் விரித்த தரையில் அமர்ந்து, நேரடியாக சங்கீதம் கேட்பது ஒரு பரவச அனுபவம். நேர் முன்னால் இரண்டு மேடைகள். காலையில் தொடங்கி

சஷாங், பாம்பே ஜெயஸ்ரீ, மதுரை டி.என்.சேஷகோபாலன், ஜேஸுதாஸ், ஜேஸுதாஸின் மகன் விஜய் ஜேசுதாஸ், கதிரி கோபால்நாத் என அனைத்து இசைப் பிரபலங்களையும் இந்நாட்களில் இங்கு பார்க்கலாம். அப்போது, சென்னை உட்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் இசை ரசிகர்கள் அங்கே குழுமுவார்கள். திருவையாறைச் சுற்றியிருக்கும் கிராமங்களில் உள்ள மக்களும் பல்லாயிரக்கணக்கில் வந்து குழுமியிருப்பார்கள். முற்பகலில் பொதுவாக இசை பயில்பவர்கள் அதிகமாகப் பாடுவார்கள். மதியத்துக்குப் பின்னர் தேர்ச்சி பெற்றவர்கள், மாலையில் இசை நட்சத்திரங்கள். எனவே, மாலையில்தான் பெருங்கூட்டத்தால் அப்பகுதியே நெரிபடும்.

திருவையாறுக்கு இசை ரசிகர்கள்தான் செல்லவேண்டும் என்ற எண்ணம் சிலருக்கு உண்டு. ஆனால், இசை பற்றிய அரிச்சுவடி பாடம்கூட தெரியாதவர், இசையை என்னவென்று தெரிந்துகொள்வதற்காகவே அங்கே செல்லலாம். நாளெல்லாம் இசை காதில் விழுந்துகொண்டே இருப்பதனால் நம்மை அறியாமலேயே நாம் அந்த பாடல்முறைக்குப் பக்குவப்பட்டுவிடுவோம். இதுவும் வேண்டாம் என்பவர்கள் அங்குள்ள திருவிழாக் கொண்டாட்டங்களுக்காக செல்லலாம். நிச்சயம் ஒரு பேரனுபவமாக திருவையாறு இருக்கும்.

**எப்படி செல்வது? எங்கே தங்குவது?**

சென்னையில் இருந்து தஞ்சாவூர் செல்ல ரயில்மார்க்கமாகவும் பேருந்து தடங்கள் மார்க்கமாகவும் தினமும் போக்குவரத்து உள்ளது. தஞ்சாவூரில் இருந்து திருவையாறுக்கு கால் மணி நேரப் பயணம். திருவையாற்றில் நல்ல விடுதிகள் உள்ளன. தஞ்சாவூரில் தங்கியும் செல்லலாம். உணவுக்கும் சங்கடம் தராத நல்ல உணவகங்கள் இங்கு உள்ளன.

**வழிப்போக்கன்**


உங்கள் வீட்டு நீரை சூரிய ஒளியில் வெப்பமாக்குங்கள்... உங்கள் பணத்தை மிச்சமாக்குங்கள்...
இதோ உங்களுக்காக
Solar Domestic Hot Water System
BSi
BRIGHT SOLAR INC.
FINANCE PLANS
TD
Prime Plus 2.75% (Over $10,000)
(Prime 2.5% effective Mar 2009)
Prime Plus 3.25% (Over $5,000)
(Prime 2.5% effective Mar 2009)
NO PAYMENT FOR 6 MONTHS !
உங்களுக்கான எமது விஷேட சலுகைகள்
$ 2500 தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் விலைக்கழிவுகள்
$ 150 வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனை கழிவுகள்
HRTC வரியிலிருந்து $ 1350.00 வரையிலான மீள் பெறும் உரிமை
இன்னும் பல...
உங்களது சேமிப்புகள் பாரியளவில் வளர்ச்சி பெற சரியான முதலீடு
நாம் உங்களது வீட்டுமின் உபயோக கணிப்புப் பரிசோதனைக்கு
50% செலுத்துவோம்
* condition apply
எமது பிரதான உற்பத்திகள்
சூரியசக்தி மூலம் வீட்டு நீரை வெப்பமாக்கும் முறை (Domestic)
சூரியசக்தி மூலம் வாயு வெப்பமாக்கும் முறை
Photovoltaic மின்சாரம்
காற்றலைகள்
புவி சார்ந்த வெப்பவியல் (Geothermal) மற்றும் உதிரிப்பாகங்கள்
CSA# 232467
BRIGHT SOLAR INC.
வந்து பாருங்கள், உங்களால் எவ்வளவு சேமிக்க முடியுமென்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள்...
5215, GTA Square, Finch Avenue East, Suite 257, Toronto,Ontario, Canada M1S 0C2
Tel: 416 754 8327
www.brightsolarinc.com
இயற்கையிலிருந்து இலவச வாழ்வாதார சக்தி

# பழைய அநுபவங்களின் தாக்கத்திலிருந்து விடுபடுவதன் அத்தியாவசியம்

என் கடந்த கால வாழ்வின் நிழல்கள் எனது தற்போதைய ஜீவியத்தைப் பாதித்துப் பிரச்சினை ஏற்படுத்திடஇதுவரை அநுமதித்ததற்காக என்னை மன்னித்துவிட இப்போ உடன்படுகின்றேன்.

தீர்க்கதரிசனமும் புத்தி தீட்சண்யமும் நிறைந்த காகம், தனது அதீத ஆர்வத்தினால் சில சமயங்களில் பிரச்சினைக்குள்ளாகின்றது என்கின்றது ஒரு பாரம்பரிய அமெரிக்க நாடோடிக் கதை. தனது நிழலைக் கண்டு அதிசயித்த காகம், அதைக் கண்கொட்டாமல் பார்த்ததுடன் அதைக் கொத்தி அதனுடன் உறவாடவும் முயன்றது. அதற்குத் தீனியும் வைத்தது. காகத்தின் கவனத்தின் ஈர்ப்பினால் உயிர்த்தெழுந்த நிழல், காகத்தைப்பிடித்துச் சாப்பிட்டு ஏப்பம் விட்டது.

இந்தக் காகத்தின் கதை, எமக்குப் பின்னால் உள்ளவற்றிற்கு, நாம் அதீத கவனம் செலுத்துவதனால் ஏற்படக்கூடிய அபாயத்தை விளக்குகின்றது. எமது கடந்தகால வாழ்க்கைச் சம்பவங்களின் நிழல்கள் எம்மை வசியப்படுத்திக் கட்டி வைத்திருக்கின்றன. அவற்றை நாம் அடிக்கடி இரைமீட்டு ஞாபகப்படுத்திக் கொள்வோம். இதனால் எமது உணர்வுபூர்வமான மனோசக்தியை அதற்கு உணவாக்கி வீணே விரயமாக்கி விடுகின்றோம். பழைய நிழல்கள் சிருஷ்டித்த நினைவுகளின் பயத்தைக் கைவிட்டு முன்னேறிட முடியாது தேங்கி உறைந்து விடுகின்றோம். நேற்றைய அநுபவ நிழல்கள் எமது இன்றைய தினத்தினை விழுங்கி விட அநுமதிக்கின்றோம்.

எம்மைப் போலன்றி, தனது நிழலின் தாக்கத்திற்கு அடிமையாகாமல் அதற்கும் அப்பால் பார்க்கும் சக்தி காகத்திற்கு உண்டு. ஆம்! நேரங்காலம் வந்ததும், மாற்றத்தின் அறிகுறியாக காகம் கரைந்து சேதி சொல்வது எமக்கு நன்கு தெரியும். நடந்து முடிந்தவற்றில் கவனம் செலுத்தாது அவற்றின் நிழலை உதாசீனம் செய்து, இனி நடக்கப் போவதைச் சிருஷ்டிப்பதில் காகம் கவனமெடுக்கின்றது. தனது தற்போதைய நிலைக்கேற்ப தனது பயணத்தின் பாதையை நிர்ணயிக்கின்றது. கலைந்திருக்கும் தனது இறகுகளைக் கோதி சரிப்படுத்துகின்றது. பறக்கும் போது களைப்பு வந்தால் காகம் உட்கார்ந்து இளைப்பாறிக் கொள்ளும். மானிடர்கள் போல் தவறு செய்யாமல் தனது முந்தைய அநுபவப் பாடங்களை வருங்கால வாழ்வெனும் யாத்திரைக்கு வழிகாட்டிட அது உபயோகித்துக் கொள்ளும்.



காகத்தைப் போல புனிதமான உனது தீர்க்க தரிசனத்தின் சக்தியை இதுவரை நீ உபயோகிக்காமல் இருந்திருக்கலாம். உனது கடந்த கால அநுபவங்களை ஒரு கண்ணாடி காட்டும் பிரதிபிம்பம் போல் இன்று உபயோகித்துக் கொள். வாழ்வெனும் யாத்திரையின் முன்னேற்றத்திற்கு உனக்கு உதவக்கூடிய உனது திறமைகளை அடையாளங்கண்டு உபயோகிக்கப்பழகு. பழையன கழிதலும் புதியன புகுதலுமே நன்று என உனது பழைய நிழல்களில் நீ கண்டுபிடிக்கும் குறைகளையும் தீய பழக்கவழக்கங்களையும் கைவிட்டு, புத்தம் புதிய சிறந்த ஆளுமை உள்ளவராக மாறி விடு.

எனது பழைய வாழ்வின் நிழல்களையும் எனது குற்றங்குறைகளையும் மன்னிக்கும் கண்களூடாகக் காண இன்று முதல் ஆரம்பிக்கின்றேன்.

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 148

*மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214*

லலிதா புரூடி













